உ

சிவமயம்.

குன்றக்குடி முருகபிரான் தம்மைப்பாடிவந்த

புலவர்க்கிரங்கி அன்னவர்பால்

எழுநகரத்தார்க்களித்த

திருமுக விலாசம்.

இராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கை சமஸ்தானம்

கீழச்சேவற்பட்டு

இளையாத்தங்குடி எழுநகரமென்று சொல்லப்பெற்ற

நேமநகரத்திலவதரித்த

அழகப்பசெட்டியார் குமாரர் கடாட்சகவி

முத்தப்பசெட்டியார் அவர்களியற்றியது.

மதுரைத் தமிழ் வித்வான்

ஸ்ரீ. நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்

ஏட்டுப்பிரதி கொண்டு,

ஒப்பநோக்கிப் பரிசோதிக்கப்பெற்று,

இராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கை சமஸ்தானம்,

புதுவயல்

ரா. ம. சு. ராமசாமி செட்டியார் அவர்களால்

மதுரை ஸ்ரீ மீனம்பிகை பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

Register] **1925.** [*Copy-right.*

உ

சிவமயம்.



அச்சிட்டவருக் கருள்புரியுமாறு

பிரார்த்தனை.

வெண்பா.

முத்தப்ப நாவலரை முன்னிருந்து காத்தபடி
இத்தரைக்கண் இந்நூலை ஏற்கவொரு—புத்தகமாய்த்
தந்தவரைக் காப்பதற்குந் தாமதமா வேல்முருகா
வந்தவரைக் காவா மகிழ்ந்து.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை.

முகவுரை.

கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், காளமேகம், ஔவைப் பிராட்டியார், முதலிய அரும்பெரும் புலவ சிகாமணிகளைப் பற்றி நந்தமிழ்நாடு முழுவதும் நன்கறிந்திருக்கிறது. அவர்கள் இயற்கையாகவே தெய்வகடாட்சம் பெற்றுச் சமயம் வந்துழித் தமிழ்த்தெய்வத் தாயாகிய மகாவாணி தேவியையே 'வா' வெனில் வரவும் 'போ' வெனில் போகவும் செய்து வந்திருக்கிறார்கள். இருப்பினும் அவரவர் தத்தங் குலத்தார்கள் "க்ஷேமம் பெற்றுய்தல் வேண்டுமே" என ஒரு சிறிதேனுஞ் சிந்தித்தா ரல்லர். இரண்டொருவர் தமது வமிசத்தார்களது வேண்டுகோட்காக அவர்களிடம் பொருள்பெற்றுச் சிறுச்சிறு காப்பியங்களியற்றி யிருக்கின்றன ரெனினும், அவை அவர்களது சாதியின் பெருமையைப் பற்றியே யன்றி அவர்களது க்ஷேமத்தைக் கருதிய தன்றாம். ஒட்டக்கூத்தப் புலவரை அவரது மரபினர்கள் கொலை செய்யவும் எத்தனித்த நிமித்தத்தினாலன்றோ அவரை யாதரித்துவரும் சோழ அரசருங் கேட்டுக்கொண்ட பின்னர் செங்குந்தமரபின ரீட்டியெழுபது என்னும் நூலியற்றினர்?

இனி "இங்கிலீஷ் கொடி பறக்கவே இளையாத்தங்குடி சிறக்கவே" என்ற ஒருவாக்கியம் பிறந்திருக்கிற தென்றும், அது பிறப்பதற்கு முன் நகரத்தார்களது நிலைமையும், அது பிறந்ததன் பின் அவர்களது நிலைமையும் இன்னின்ன தன்மைய தென்றும் நந்தமிழ்நாடு நன்குணருமன்றோ? இராமாயணம், மகாபாரதம், நளவெண்பா, முதலிய இதிகாசங்களை ஒருதராசுத் தட்டிலும், இவ்வொரு வாக்கியத்தை ஒரு தராசுத் தட்டிலும் வைத்து நிறுத்துப் பார்ப்போமானால் "அவைகள்முன்னிருந்துள்ள ஒருவர் சரித்திரத்தைப் பற்றியதாகையானும், இது தன் ஜாதியாரின் க்ஷேமத்தைப் பற்றிய தாகையானும்" அந்நூல்களினும் இவ்வாக்கியமே மிக்கு மதிப்புடைத்து என்றுதான் செப்புதல்வேண்டும்.

நிற்க இப்புலவர் சிகாமணி சற்றேறக் குறையத் தொன்னூற்றைம்பது வருடங்கட்குமுன் கீழைச்சேவற்பட்டு, இளையாத்தங்குடி எழுநகர மென்று பெயர் வழங்கிய நேம நகரத்தில் அவதரித்

தாராவர். இவரைத் தவமிருந்து பெற்ற தந்தையார் பெயர் அழகப்பசெட்டியார் என்றும், இப்புலவர் பிரானது பெயர் முத்தப்ப செட்டியார் என்றும் நந்தமிழ் நாடு வழங்கும். இவர் சிறுப்ப வயதில் மிகவும் கஷ்ட நிலையிலிருந்து வந்துளா ரென்று இவரி யற்றியுள்ள சிற்சில பாடல்களினல் அறியக்கிடக்கும். இவர்கா லத்து அப் பதியின்கண் 'வெண்பாப் புலி வீரகவிராயர்' என்றும், 'வேலாயுதக்கவிராயர்' என்றும் இரண்டு புலவர்கள் மிக்க பிரபல முற்றவர்களா யிருந்தார்கள் என்ப. இவர் முதன்முதல் ஒரு சாக்கில் உப்புவாங்கி அதைச் சுமையாகக் கட்டித் தலையிற் சுமந்து கொண்டுபோய், அடுத்துள்ள கிராமச் சந்தைகளில் சில்லறையாய் விற்று, அதில்வரும் சொற்ப ஆதாயத்தைக்கொண்டு, தம் குடும்பத்தைப் போஷித்து வந்தனர். ஒரு நாள் ஒரு கிராமச் சந்தைக்கு இவர் போயிருந்தபோது, சுமார் பகல் பனிரண்டுமணி யிருக்கலாம். சந்தையோ மூன்று மணிக்குமேல் அங்குக்கூடுவது வழக்கம். உப்பைத் தவிர இவர்கையில் ஒரு காசும் இல்லை. பசி யதிகரித்துக் களைத்துப்போய் உப்பைக் குவித்து வைத்து, அதன் மேல் படியை வைத்துவிட்டுப் பசியின் கிறுகிறுப்பாற் சோர்ந்து போய் உட்கார்ந்திருந்தனர். அதற்கருகிலிருக்கும் வீட்டிலுள்ள ஒரு செட்டியார் திண்ணையின் மீது நின்றுகொண்டு, இவர் சோர்வுற்றிருப்பதை யுற்று நோக்கிச் சமீபத்தில் வந்து, "ஐயா! படி என்னவிலை" என்று கேட்டார். இவர் 'ஒரு பணம்' என்று மிகவும் களைப்போடு விடை பகர்ந்தனர். செட்டியார் அங்கிருந்தபடியே தன் நாயகியை யழைத்து, இரண்டு இலை போடும்படி செப்பிவிட்டு, ஒரு பையனை யழைத்து உப்பைப்பார்த்துக் கொள்ளும்படி செய்து நமதுபுலவரை உபசாரத்தோடு அழைத்துக்கொண்டுபோய்ச் சாப்பிடும்படி வேண்டிக்கொண்டனர். செட்டியார் மனைவியும் மிக்க உபசரித்து, அன்னம் படைக்க, அதை அமுதெனப் புசித்த நம் புலவர் ஆனந்தம் பெற்று,

"அன்போ டறுசுவையோ டன்னமளித் தாதரவா
யென்பசியைத் தீர்த்துவிட்ட தென்னினமே—பின்பிந்
நகரத்தார் தங்களிடம் நண்ணிக் குபேரன்
பகருகடன் கேட்கவரும் பாங்கு"

என்று பாடி விட்டுச் சென்றனர். அன்று தொட்டே நமது நகர வணிகர்களுக்குச் செல்வம் பெருக ஆரம்பித்து விட்டதென்று

சொல்லலாம். பின்னொரு சமயம் நடு இரவில் இவர் சாலைவழியே மற்றொரு கிராமத்தை நோக்கிப் போம்போது இரண்டு திருடர்கள் இவரை வழி மறித்து, மூட்டையைப் பறித்தார்கள் அதேசமயம் போலீஸ் பீட் அங்குவருகிற அரவந்தெரிந்து, பறித்த மூட்டையைப்போட்டுவிட்டுத் திருடர்கள் ஓட்டமெடுத்தார்கள். கீழே கிடக்கும் சும்மையை மீண்டும் தலையிலெடுத்துக்கொண்டு, திரும்பின நம்புலவர், ஆங்கு வந்து நின்ற போலீஸாரைப் பார்த்து, "நீங்கள் யார் ஐயா!" என்று கேட்க "நாங்கள்தாம் இரவில் இச்சாலையில் திருட்டு நடக்காமல் பார்த்துவரும் போலீஸார்" என்று அவர்கள் பதிலுரைத்தனர். "இதற்காக உங்களுக்குச் சம்பளம் கொடுப்பவர்கள் யார்" என்று புலவர் வினவினர். "இப்பொழுது நம் இந்தியாவைப் பரிபாலித்துவரும் இங்கிலீஷ்காரர்கள்" என்று அவர்கள் விடையளித்தனர். இது சமயந்தான் இவர் அக மகிழ்ந்து, இத்தகைய "இங்கிலீஷ் கொடி பறக்கவே" என்று சொல்லி இன்னுமோர் மோனைக் கெதிர்பார்த்து, அதில் யாரைச் சொல்வது என்று சிறிது ஆலோசித்து, " இளையாத்தங்குடி சிறக்கவே " எனச் சொல்லி விட்டுப் போலீஸாருக்கும் நன்றிகூறிச் சென்றனர் என்ப. இஃதிங்கனமாக எரசுநகரம் என்னும் ஊரில் வசித்துவந்த இம்முடிலிங்கேந்த்ரதுரை என்ற ஒரு சீமான் வெண்பாப்புலி வீரகவிராயருக்குத் தகுந்த பரிசுதவி, அவரிடத்துத் தன் பெருமையைப் பற்றி,

" இம்முடிலிங் கேந்த்ரதுரைக் கேற்ப நடந்தோர்கள்
தம்முடிகொண் டேயுலகில் தாம்வாழ்வர்" என்று

ஒரு பாட்டெழுதி வாங்கியிருந்தனன். அது அவ்வூரிலுள்ள ஒவ்வொரு வீட்டுச் சுவரினும் வரையப்பட்டிருந்தது. வியாபார விஷயமாய் ஆங்குச் சென்றிருந்த நம்புலவரேறு அப்பாடலை வாசித்தறிந்து, அதன் கீழே " சும்மாவோ

தப்பில் தலையரிவான் சாட்சியொன்று வேண்டுமெனில்
அப்பனெனும் தொப்பவீர னும்" என்று

எழுதிவிட்டுத் தம்மூர் புகுந்தனர். இதை யறிந்த அப்பிரபு இவர் மீது கோபங்கொண்டு, இவ்வாறு எழுதியதற்காக இவரைத் தண்டிக்க வேண்டுமென்று காலத்தை எதிர்பார்த்து, அதற்கான உபாயங்களைத் தேடிக்கொண் டிருந்தனன். இஃதறிந்த இவர்,

"பத்தலார்க் குதவுபதி எரசுமேவும்
பாக்கியனே யிம்முடிலிங் கேந்திராகின்
தத்துவாம் பரிகளெங்கே கிரீடமெங்கே
தண்டிகைபல் லக்குமெங்கே தனந்தானெங்கே
மெத்தைகொண்ட வீடுமெங்கே யதனுள்மேவும்
மேலான பவுசொடுபெண் டாரமெங்கே
சுத்தவீ ரங்களெங்கே சும்மா போச்சோ
தொப்பைவீ ரனைவதைத்த தோஷந்தானே" என்று

ஒரு சீட்டெழுதி, யவனுக்கனுப்பி வைத்தனர். அதிலிருந்து அப்பிரபு மிகவும் கஷ்ட நிலைமை யடைந்து, வறுமையிலாழ்ந்தனன். இஃதிங்கனமிருக்க வெண்பாப்புலி வீரகவிராயர் திரும்ப எரசு நகரம் வந்து, தாம் எழுதிய பாட்டின் கீழ் பூர்த்திபண்ணியிருக்கிற பாட்டைப்பார்த்து, அதில் நடந்திருக்கிற விஷயமும் மற்றும் சரியாயிருக்கக்கண்டு, பொறாமைகொண்டு நம்புலவரை வாதில் வெல்ல வேணுமென்று கருதிச் சேவற்பட்டு வந்து, இவர் வீட்டில் விசாரித்து, வேலாயுதக்கவிராயர் வீட்டுக்குப்போயிருப்பதாய்த்தெரிந்து ஆங்குச் சென்றனர். இவர் வருவதறிந்த * வேலுக்கவிராயர் நமது புலவர்பிரானோடு பேசிக்கொண்டிருப்பதை நிறுத்தி, வருவாரை நோக்கி "வாருங்கள்! வாருங்கள்!" என்று முகமன் கூறினர். அதற்கு ஒரு மறுமொழி யாகவும், ஆங்குள்ள நமது புலவர் அறிந்து கொள்ளுமாறும் "வந்தேன் புலி வந்தேன் புலி" என்று சொல்லிக்கொண்டே அவரருகிற் சென்றனர். இதற்குப் பதில் ஒன்றும் பகரமுடியாது, சிறிது தயங்கிய கவிராயர், நமது புலவர் முகத்தை நோக்கினர். "புலி வந்தாலென்ன, நம்மிடந்தான் வேலிருக்கிறதே?" என்று, நம்புலவர் பெருமான் விடையளித்தபடியால் வெண்பாப் புலி சிறிது மனத்திகிலடைந்தாரெனினும், அதை வெளிக்காட்டாது மிகவும் கோபத்தோடு "நமது கவியைப் பூர்த்தியாக்கிய புலவன் ஈண்டு வந்தானுமே?" என்று கவிராயரை வினவினர். "ஆம் அப்புலவன் நான் தான் அதற்கென்ன?" என்று நமது புலவர் விடையளித்தனர். "அங்ஙனமாயின் இதோ வீங்குள்ள நங்கவிராயர் வீட்டு ஆட்டுக்கடாவினது தலையை யான் துணிக்கப்பாடுகிறேன். நீர் பொருதப்பாடுவீரோ" என்று வெண்

* இது மற்றவரால் அழைக்கப்படும் பெயர்.

பாப்புலி தமது கட்பொறி பறக்கக் கேட்டனர். "நீர் வசைபாட மட்டும் வல்லவர் என்பதை யாமறிவோம்; யாம் வசையும், இசையும் பாடுவே மாகவே துணிக்கவும் பாடுவோம், பொருதவும் பாடுவோம்" என்று நமது புலவர் பதிலுரைத்தனர். இது கேட்ட கவிராயர் "அங்ஙனமாயின் நமது வெண்பாப்புலியாரை விட நீவீரிரண்டத்தனை மடங்கு உயர்ந்தவர்" என்பது வெளிப்படை மேலும் துணிக்கப்பாடுவது இலேசு, பொருதப்பாடுவது அரிது. ஆனல் அவர் கேட்டுக்கொண்டபடி நீர் பொருதப்பாடுதலே சிறப்புடைத்து" என்றனர். அவ்வாறே யிருவருஞ் சம்மதித்த பின்னர் வெண்பாப் புலியார்

"எற்கவிக்கு நேரே யெதிர்கவியுஞ் செப்புதற்கோர்
பொற்கவியு முண்டோவிப் பூவுலகில்—நற்கவிசொல்
வேலுக் கவிராயர் வீட்டுக் கடாத்தலையே
சாலரண்டு துண்டாவாய் தான்" என்று,

ஓர் வெண்பாப் பாடினர். உடனே அங்கு நின்றுகொண் டிருந்த ஆட்டுக்கடாவினது தலை அது தானே துணிப்புற்றுக் கீழே விழுந்து துடித்தது. இதை யறிந்த நமது புலவரேறு,

"கலையது படித்தவெண்பாக் கவிப்புலி கவியைக்கேட்டுத்
தலையது துணிப்புண்டாடு தவிக்கிற தந்தோ முன்போல்
நிலைபெறப் பொருதவென்றுநிகழ்த்தினேன் முத்தப்பன்யான்
உலகினி லுள்ளோர்காண்பி ருமையவள் சுதன்காப்பாமே."

என்று குன்றக்குடிக் குமரக்கடவுளை யாராதித்து, ஒரு திருவிருத்த மியற்றினர். ஈண்டு "நானே யினி யுன்னை வேண்டுவதென்கொல் நளினமலர்த் தேனே கபாடந் திறந்திடுவாய் திறவாவிடிலோ, வானேறனைய யிரவிகுலாதிபன் வாசல்வந்தால், தானே திறக்கும் நின் கைத்தலமாகிய தாமரையே" என்ற ஒட்டக் கூத்தரினது செருக்குமிக்க பாடலொடு வெண்பாப்புலியார் கவியும் "இழையொன்றிரண்டு வகிர்செய்த நுண்ணிடை யேந்தியபொற், குழையொன்றிரண்டு விழியணங்கே கொண்ட கோபந்தணி, மழையொன்றிரண்டுகைம் மானு பரணன்நின் வாசல்வந்தால், பிழையொன்றிரண்டு பொறுரோ குடியிற் பிறந்தவரே" என்ற புகழேந்திப் புலவரினது அமைதிமிக்க பாடலொடு நம்புலவர்பிரான் கவியும்

ஒத்தமைந்த பெற்றி ஒப்புநோக்கற்பாலது. நம்புலவர் இப்பாடலைப் பாடி முடித்தவுடன் அங்குத் துள்ளித் துடித்துக்கொண்டிருந்த ஆட்டின் தலை முன்போல் அது தானேபொருந்தி யவ்வாட்டுக்கடா வெண்பாப் புலிமேல் ஒரு புலிபோற் பாய்ந்தது. அதற்கவர் பயந்து ஒதுங்கினதைக் கண்ட ஆங்கிருந்த பெருங்கூட்டத்தார் எல்லோரும் நகைத்தனர். இதுதருணம் நம்புலவரேறு,

"பாட்டுக்குப் புலிபயந்து பதுங்கியதும் போதாமே
ஆட்டுக்கும் புலி பயந்தால் யார்தாம் நகையார்கள்" என்று

சொல்லித்தாமும் நகைக்க, அக்கவியைப் பூர்த்தி பண்ணும் நோக்கமுற்று, வேலுக்கவிராயரவர்கள்,

"காட்டுப் புலியதுபோல் கவிபுகலும் நம்மிடத்தோர்
வீட்டுப் புலியானார் வெண்பாப் புலியானார்" என்று

முடித்துத் தாமும் நகைத்தனர். இதனையறிந்த வெண்பாப்புலியார் மிகவும் மனம் புழுங்கி வெட்கமுற்று, "முத்தப்பா! நீதான் என்னைப் பெத்தப்பா" என்று நம்புலவரேற்றையும், கவிராயர் முதலிய பெரியாரையும் வணங்கி, விடைபெற்றுச் சென்றனர். இஃதிங்ஙனமிருக்கப் பின்னுமோர் கால் இப்புலவர் வியாபார விஷயமாய்ப் பிறநகர் புகுந்துள்ள போழ்து, ஆங்கொரு தெருவழியே போய்க்கொண்டிருந்தனர். அத்தெருவிலுள்ள ஒரு தாசி தன் வீட்டுத் திண்ணையிலிருந்துகொண்டு, தனது பணச்செருக்கினால் இவரைப் பார்த்துப் பரிகாசமாய் "வாருமையா சட்டியாரே" என்றழைத்தனள். அதற்குமறுமொழியாக இப்புலவரேறு "ஆம் அம்மா! வந்தேன். ஆனால் எனது அநுமதியின்றி என் சாதிப்பெயரிலுள்ள ஒற்றைக்கொம்பை நீயே எடுத்துக்கொண்டனைபோலும்? இருப்பினும் நானே என்மனமுகந்து, அதனை யிரட்டைக் கொம்பாக்கி யீந்தனன்; பெற்றுக்கொள்" என்று சொல்லிவிட்டுப்போயினர். அவள் சிறிது படித்தவளானது பற்றி ஆலோசித்தறிந்து "ஓஹோ நமது சாதியின் பெயர் தாசியல்லவா? அதற்குமுன் ஒரு இரட்டைக் கொம்பைச் சேர்த்தால் தோசி யென்றல்லவா ஆகிறது! இவர் சொன்னபடி நாம் தோசியாகப் போவதில்லை என்றாலும், இவர்புத்திக்கு நாம்மெச்சவே வேண்டுமென்று உவகை பூத்தனள். பின்னர் சிறிது

காட்டுப்புலி—எதார்த்தமானபுலி. வீட்டுப்புலி—பூனை.

நாளைக்குள் அவள் தோசியாகவே கெட்டு, வறுமை யடைந்து சேவற்பட்டு வந்து இவரது வீட்டை விசாரித்துச் சமயம் பார்த்துச் சந்தித்து, "ஐயா செட்டியாரே! என் பிழையை மன்னிக்க வேண்டும்" என்று அவரடியில் வீழ்ந்து பணிந்தனள். உடனே புலவர் 'பெண் புத்தி பின்புத்தி தானே' என மனதிரங்கி,

"என்னெழுத்தை யிந்தா யெனக்கானுல் நீபினிமே
யுன்னெழுத்தைக் கொண்டொழுங்கா யோடிப்போ-முன்னமெங்கள்
காளமே கத்தையொரு கன்னியெதோ சொல்லியந்தோ
நீளத்தேய்ந் தாள்நீ நினை" என்று

பாடி யனுப்பிவைத்தனர். அதிலிருந்து அவள் யோக்யதையுள்ள வளாயும், முன்போல் செல்வாக்குடையவளாயு மாயினள் என்ப.

இனிப்பொதுவாகவே நந்தமிழ்ப் புலவர்கள்மாட்டுப் புகுந்து, குடியிருந்து, அவர்களை வருத்து மியல்புற்ற தீயினுங் கொடிய வறுமை நம்புலவர்பிரானை விட்டுச் சிறிது சிறிதாய் விலகத்தலைப் பட்டது. பின்னர் சுவாமி தரிசனையின் நிமித்தம் குன்றக்குடி சென்றிருந்த போழ்து, முருகக்கடவுள் மீது "திருமுகவிலாசம்" என்னும் இவ்வரிய நூலியற்றி, அதை யவ்வூரார் கேட்டுக்கொண்டவாறு சந்நிதானத்தின் முன்னரே அரங்கேற்றுதல் செய்தனர். நூலரங்கேற்றுச் செய்துமுடிந்த உடனே நீண்டகாலமாக மழையில்லாது வருந்தியிருந்த அவ்வூரில் மழைவளஞ் சிறந்து வருஷித்தது. ஆங்குத் தேவாரம் ஓதும்பொருட்டு வந்திருந்த திருநெல்வேலிச் சைவர்களிற் சிலர் நம்புலவரைச் சந்தித்து, எங்கள் ஊரின் சிறப்பைப்பற்றியும், எங்களைப்பற்றியும் ஒரு கவி பாட வேணுமென்று கேட்டுக்கொண்டனர். அதற்கிவர் புன்முறுவல் செய்து,

"ஒருநெல் பிறர்க்குதவார் ஊர்முதலி லாசை
திருநெல்வே லிச்சைவர்க் கம்ம—அருமையொடு
தம்பியென்றும் அண்ணனென்றுந் தாம்பேசு வாரவரை
நம்பினுற் போதுமிக நன்று."

என்று பாடவும் அதை யவர்கள் கேட்டு, உள்ளதன்மையை உள்ளவாறு சொன்னதற்காக வெட்கிச் சென்றனர். பின்னர் நேமநகர் வந்து, ஆண்டுக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் ஜெயங்கொண்ட சோழீசர் மீது ஜெயங்கோண்டார் சதகம் என்ற இதற்

இவரும் ஒரு கடாட்ச கவியானது பற்றியே காளமேகப் புலவரை "எங்கள் காளமேகம்" என்றனரென்பது நுணிகியுணர்தற்பாலது.

கிரண்டாமோர் பிரபந்த மியற்றி, அதையும் அவ்வூரார்கள் கேட்டுக் கொண்ட நிமித்தம் ஆங்குச் சந்நிதானத்தின் முன்னரே அரங்கேற்றுதல் செய்வதற்கோர் முகூர்த்த மேற்படுத்தியிருந்தனர். அது தருணம் ஆங்கிருந்த தனவைசியப் பிரபுக்களுடன் பல தமிழ்ப் புலவர்களும் குழுவியிருந்தனர். நூலை வாசிக்க ஆரம்பிக்கிற தருணம் "இவரைத் தகுந்த சபையினிடத்து வைத்துச் சிறிதேனும் அவமானப் படுத்தவேண்டுமே" என்று சமயம் பார்த்திருந்த பழய வெண்பாப்புலி வீரகவிராயர், திடீரென வெழுந்திருந்து, நமது நாவலர் பெருமானை நோக்கி,

"ஒங்குபத்மா சூரனைக்கண் டோடியொளித் தார்விசயன்
வாங்குதனு வாற்பூசை வாங்கினர்—ஈங்கிருக்கும்
நன்னியமச் சோழீச னார்செயங்கொண் டாரென்றால்
என்னசெயங் கொண்டார் இவர்."

என்று பாட்டால் ஒரு கேள்வி கேட்டனர். "இதற்கென்ன பதில் சொல்லப் போகின்றனரோ" என்று அங்கிருந்த புலவர்களும், பிரபுக்களும் சற்றுத் திகைத்தனர். உடனே நமது கவியரசர் யவரைப்பார்த்து காம்பீரமான புன்முறுவலுற்று,

"என்னசெயங் கொண்டா ரிவரென்றீர் முப்புரத்தைச்
சொன்னமய மாய்ச்சமைத்த சோழீசர்—பின்னுஞ்
சிரித்துச் செயங்கொண்டார் சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டார் ஏற்று."

என்று மறுமொழி யிறுத்து, அவர் நாவை யடக்கி, அமைதியாயிருக்கக் கட்டளையுமிட்டனர். பின்னர் நூல் துவங்குதற்கு முன் ஜெயங்கொண்ட சோழீசர் மீது "பஞ்சாட்சர வர்க்கபூஷணம்" என ஐந்தும் ஐந்து உலகம் பெறும்படியான ஐந்து கலித்துறையினல் தோத்திரப்பா வியற்றி, நூலையும் அரங்கேற்றுதல் செய்து முடித்தனர். அப்பாக்களையும் இந்நூலினது இறுதியில் சேர்ப்பித்திருக்கிறேம். அரங்கேற்றுதல் முடிந்த உடன் வெண்பாப் புலி வீரகவிராயர் தாமே எழுந்து, உண்மகிழ்ந்து,

"கற்றவர்க் கெல்லாமோர் பூஷணம் நீநின்னைக் காசினியில்
பெற்றவ ளேசெல்வப் பேறுடை யாள்நின் பிதாவிழைத்த
நற்றவ மேதவம் நாட்டார் வணிகர்க்கோ ரத்தினம் நீ
கொற்றவ ரும்புகழ் முத்தப்ப வித்வ குலமணியே."

என்று பாடிப்புகழ்ந்தனர். வேலாயுதக் கவிராயர் முதலிய பெரியாரும் இவரது வித்வத் திறத்தை மெச்சி வியந்துகொண்டாடினர். பிறகு அந்நகரத்தார் எல்லோரும் புலவர்க்குத் தகுந்த பரிசில் நல்கி, மிக்கு மரியாதையாய்த் தமது இல்லம்புக வழியனுப்பி நின்றனர். அவர்களை விழிகொண்டு நோக்கிய நம்புலவரேறு,

"பரிசிலையே வேண்டியிந்நூற் பாடிவந்தேம் மிக்குப்
பரிசிலையென் னுதளித்தீர் பற்றி—ஒருசிலையை
வில்லா வளைத்துசெயங் கொண்டார் திருவருளால்
எல்லாரும் வாழ்வீ ரிருந்து."

என்று தம் நாவார வாழ்த்திச் சென்றனர். ஆகவே இற்றைக்கும் அந்நகர் மிக்கு செல்வமுற்று வாழ்கிற தென்பதும் கூறுமலே அமையும். நிற்க மற்றொரு சமயம், அவர் செவ்வூருக்குப் போயிருந்த போது ஆங்குள்ளவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசியும், செய்த திருநெல்வேலி யுபசாரத்தைக் கண்டு,

"எவ்வூர்க்குப் போனாலும் எவ்வுலகஞ் சென்றாலும்
செவ்வூர்க்குப் போகமனஞ் செல்லாதே—அவ்வூரார்
பார்த்திருக்க உண்பார் பசித்தார் முகம்பாரார்
கோத்திரத்துக் குற்ற குணம்."

என்று பாட, அதன்பின் இவரினது மகிமை யறிந்து, அவ்வூரார் தகுந்த பரிசளித்து, உபசரித்தனர் என்ப. ஒரு சமயம் இவர் வீட்டு வாயிலின்கண் நெல் விரிக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த இப்புலவருடைய குமாரனை எழு வயதுச்சிறுவன் ஆங்குவந்து நெல்லுண்டுகொண் டிருந்த காகங்களை விரட்டிவிரட்டிப் பார்த்தும், அவை போவதும், பின்னர் வருவதுமாய்த் திரும்பத் திரும்ப வந்துகொண் டிருந்தது பற்றி,

"காகா வெனக்கதறுங் காகங்காள் இப்பொழுதே
போகாது போனலோ பொல்லாப்பாம்—சாகாதீர்
நெல்லை யருந்துதற்கு நீர்வந்து யானுமக்குச்
சொல்லி வைத்தேன் செல்வீர் தொலைந்து"

என்று பாட்டால் விரட்டினன். ஓடிப்போன காகங்களிற் சில திரும்ப வரவும், ஆங்கு வீழ்ந்திறந்து போயின. இதையறிந்த புலவர் ஆங்குற்றுத் "தலையிருக்க வாலாடுதோ" என்று கேட்டனர். ஆகவே அவர் பரம்பரையில் கவிபாட வராது போயிற்றும்.

பின்னர் ஏதோ கார்யார்த்தமாக இவர் சிக்கல் என்னும் கிராமத்திற்குச் சென்றிருந்தபோழ்து அங்கு யாமநேரத்தில் வெற்றிலை

யின் மீது நினைப்பு உண்டாய் அது கிடைக்கும் வழியின்றி, அவ்வூரில் எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணியக்கடவுளை நினைத்து,

"குத்துவார் வெட்டுவார் கோடிபெறு வார்நின்பால்
பத்தல்ல எட்டல்ல பஞ்சமிலை—இத்தினை தான்
வெற்றிலையும் பாக்கும் விரும்பினேன் சிக்கலின்கண்
உற்றிருக்கும் வேலா உதவு."

என்று பாடினர். பாடவே ஆங்கோர் வழிப்போக்கரைப்போல் சாமியே வடிவுகொண்டு வெற்றிலை, பாக்கு, சுண்ணும்புடன் வந்து கொடுத்துவிட்டு மறைந்தனர். இவர் யாரோ ஒருவர் கொடுத்துளாரென்பதாய் நினைத்துக்கொண்டு, அதை மிக்க ஆவலோடு போட்டுக்கொண்டனர். அது அவருக்குத் தேவாமிர்தத்திலும் ருசித்ததுகண்டு இதுவும் குமரக்கடவுள் திருவிளையாட்டெனு,

"அவ்வைக்கும் அந்த அருண கிரியார்க்கும்
செவ்வையாய்ப் பாடுந் திறமறிந்தே—நவ்வற்
கனியுங் கரமுங் கலந்தளித்த வாரூ
நனியெனக்கீ தீந்தவகை நன்று."

என்றுபாடி, முருகக் கடவுளின் திருவருளைக் கொண்டாடிச் சென்றனரென்ப. முற்காலத்தில் இரட்டைப் புலவர்களுங்கூட, "தேங்குபுகழ் நாங்கூர்ச் சிவனேயல் லாளியப்பா, நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ—போங்காணும், கூறுசங்கு தோல்முரசு கொட்டோசை யல்லாமல், சோறு கண்ட மூளியார் சொல்" என்று பாடினதாகவும், ஆங்குச் சிவபிரானே வலிய அன்னங்கொணர்ந்து கொடுத்ததாகவும் இரட்டையர் சரிதையில் காணப்படுகிறது.

இஃதிங்ஙனமிருக்க வேம்பத்தூரின்கண் பிறந்தவரும் இலக்கணவிலக்கிய வல்லுநரும் பரம்பரை வித்வானுமாகிய மார்த்தாண்டப் புலவர் என்பார் ஒருவர், தமது வறுமை நீங்க வகையற்றவராய் நம் புலவர்பெருமான் மகிமையைக் கேள்விப்பட்டு, கீழச்சேவற்பட்டுக்கு வந்து, புலவரைச் சந்தித்து, வணக்கமாய்த் தாம் இன்னரென்று தெரியப்படுத்தவும், இவரும் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தாராகவே அவருக்கு முகமன் கூறி "வந்த விபரம் யாதோ" வென்றனர். அதற்கவர் "தங்களை நேரில் காணவேண்டுமென்ற அவா எனக்கு நீண்டநாளா யிருந்துவந்தது. மேலும் தனலக்குமி யென்பாள். புலவரிடத்திலேயே வாதொழிய, வறு

குத்துவார் வெட்டுவார்—சூரபத்மன்,

மை யென்னுங் கொடியநோய் வந்து குடியேறி விடுகிறதே! அதன் காரணம்யாதோ என்பதும் எனக்கொரு சந்தேகம்'' என்றனர். இது கேட்ட நம்புலவர்பிரான் சிறிது புன் முறுவல் கொண்டு,

"படியாத மூடனையோ படித்தா யென்பீர்
பணமற்ற வறிஞனையோ பாக்யன் என்பீர்
குடிகாரப் போக்கிலியைக் குணவானென்பீர்
குன்றுரும் புயமென்பீர் கூனற்றோளை
வடிகட்டுங் கஞ்சனையோ வள்ளல் என்பீர்
வன்போரில் புலியென்பீர் வலியிலானை
விடியாத மூஞ்சியையோ வேந்தன் என்பீர்
வினைவிடுமோ பொய்க்கவிதான் விளம்புவோர்க்கே.''

என்று பாடி, அவருக்கு வேண்டுவன நன்மதி யுரைத்தும், பற்பல சந்தேகங்களை நிவர்த்தித்தும், தம்மைத் தேடிவந்ததற்காக அவரை நேமநகர் வணிக மக்களிடம் ஆற்றுப்படுத்தி,

" இத்தரை முழுதும் இசைபெறு நம்மீர்
முத்தப் பன்யான் மொழிவது கேண்மின்
செந்தமிழ்ச் செல்வச் சீமா னிவர்தாம்
வளம்பெறு 'நிம்பை' மார்த்தாண்டப் புலவர்
மடப்பளி யடுப்பு மறந்துதன் அடுதொழில்
ஆம்பி பூத்ததா மாதலி னிலிவர்
நம்பா லுற்றனர் நாவல ரிவர்க்கே
தம்புகழ் நிறீஇத் தருநிகர் நீவீர்
வேண்டும் பரிசில் விரும்புவ தளித்தும்
ஆண்டிவர் வறுமைநோ யறவே களைந்தும்
சிறப்புற வனுப்புவீர் நேம
நகரிற் குபேர நலம்படைத் தோரே.''

என்று தீஞ்சுவை யொழுகும் தெள்ளமுதச் சொற்குழுவாகிய நற்கவியொன்று வரைந்தளித்து, இவரை யனுப்பி வைத்தனர். இவர் ஆங்குச் சென்று, அங்ஙனமே பெற்று, வாழ்ந்து வந்தனரென்ப.

இவரது புத்திரர்கள் சர்க்கரை கருப்பஞ் செட்டியாரென்றும், சவ்வாது மெய்யப்ப செட்டியாரென்றும், சீனி அழகஞ் செட்டியாரென்றும், சிவத்தராமஞ் செட்டியாரென்றும், எங்கும்பராபரம் ஏகப்பசெட்டியாரென்றும், மிக்க பிரபல

நிம்பை—வேம்பத்தூர்.

மாய் வாழ்ந்து வந்தனர். ஏகப்பசெட்டியார் புத்திரர் நாராயணஞ் செட்டியா ரென்றும், பௌத்திரர் காசிச் செட்டியா ரென்றும், இற்றைக்கும் இருந்து வருகின்றனர். காசிச் செட்டியா ரென்பார் சிறந்த கல்வித்திறம் வாய்ந்தவராயும், ஆராய்ச்சி வல்லுநராயும் காருண்யமிக்கவராயும் செல்வம் பொழிந்துள்ள பிரபுவாயுமிருந்து வருகின்றனர். சற்றேறக்குறையப் பத்து வருடங்களுக்கு முன் கொழும்பில் யாம் 'பாலசந்திரன்' என்ற பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்துவந்த காலத்து, ஆங்குள்ள வணிக மக்களின் ஆதரவு பெற்றுச் சேந்தமிழ்க் கழக வித்தியா சாலை என்னும் பெயரிய ஒரு பள்ளிக் கூடமும், ஞான பண்டித சபை என்னும் பெயரிய ஒரு பிரசங்கக் கூடமும் நடத்திக்கொண்டு வந்தேம். அதுபோழ்து ஸ்ரீமான் ரா. ம. அரு. அரு. ரா. ம. வீட்டுக் கணக்கப்பிள்ளை, கண்டமாணிக்கம் சோமசுந்தரஞ் செட்டியா ரவர்கள் அடிக்கடி எம்மிடம் இப்புலவரது வாக்கில் சிற்சில பாடக் கேட்டும், அவரிடத்திருந்தே சிங்கப்பூர் எம்பெரர் ஆப் இந்தியா பிரசில் பதிப்பிக்கப் பெற்ற இந் நூலொன்று வாங்கிப் பார்வை யிட்டும் இருக்கின்றேம். அதில் பெரும்பாலும் பிழைகள் நிறையப் பெற்றிருந்தபடியான் மற்றொரு ஏட்டுப்பிரதி சம்பாதித்து, அதை ஒப்ப நோக்கி, அச்சிடவேண்டுமென்றும் அவா வுற்றேம். யாமும், யாழ்ப்பாணம் ஞானசித்திப் பத்திராதிபர், வித்வான் ஸ்ரீ தாமோதரம் பிள்ளை யவர்களும் ஒரு சமயம் கீழச்சிவபுரி சன்மார்க்க போதசங்க வருடபூர்த்திக் கொண்டாட்டத்திற்காகச் சென்றிருந்த போழ்தும் சில பெரியாரிடத்து விசாரித்தேம். ஏடு கிடைத்தல் அரிதாயிருந்தது. திருவருள் கூடாததுபற்றி எமதவாவை ஒருவாறு அடைக்கி வைத்தனம். 'கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது' என்றபடி எமது அரிய நண்பர் புதுவயல் ரா. ம. சு. ராமசாமி செட்டியார் என்பார் அரிதின் முயன்று ஒரு ஏடு சம்பாதித்துப் பழைய அச்சுப் பிரதியோடு ஒத்துநோக்கிப் பதிப்பிக்க வேணுமென்று மதுரை வந்து, மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானும், சங்கநூற் பரிசோதகருமாகிய ஸ்ரீமான் சுப்பிரமணியக் கவிராயர், பிரம்மஸ்ரீ திருநாராயணையங்கார் முதலிய சிற்சில பெரியாரைச்சந்தித்து, ஈற்றில் எம்மிடம் வந்து சேர்ந்தனர். அதுபோழ்து எமக்கு நேர்ந்த உள்ளக் களிப்புக்கோர் எல்லைகட்டி வரைய எம்மால் முடிய வில்லை. இவர் கொணர்ந்த ஏட்டுப்பிரதியுடன் முற்காலத்து எழுதப் பெற்ற

கையெழுத்துப் பிரதியும் ஒன்று கொணர்ந்தாராகவே இவைகளை வைத்து ஒப்புநோக்குழிச் சொல்வகையினும், பொருள்வகையினும் எமக்கேற்பட்டிருந்த ஐயப்பாடு அறவே நீங்கிற்று. நமது செட்டியாரவர்களது பொருட் செலவிலேயே எம்மாற் கூடியவரை சுத்தப் பிரிதியாக அச்சிட்டு இந்நூலை வெளிப்படுத்தினேம். இப்புலவர் பெருமான் அவ்வவ் வமையங்களிற் பாடிய தனிப்பாடல்கள் இன்னும் நூற்றுக்கணக்காய் உள்ளன. இவையன்றி, ஜெயங்கொண்ட சோழீசர்பிள்ளைத்தமிழ், பதிற்றுப்பத்தந்தாதி, கலித்துறையந்தாதி, நேமநகர்க்கலம்பகம், ஜெயங்கொண்ட சோழீசர் ஊசற்றிருநாமம் முதலிய பிரபந்தங்களும் நம் வித்வப் பெம்மானால் இயற்றப் பெற்றனவா மென்ப. இவர் இசையும் வசையும்பாட வல்லுநரா யிருந்தபோதிலுங்கூடப் பெரும்பாலும் வசைபாடிக் கெடுத்ததாக இல்லை. வசைபாடிய தம் புத்திரனையும் தடுத்துவிட்டனராகவே, புலவர்களில் இவரொரு பெருந்தகையாய்க் காணுகிறார். பண்டைக் காலத்திருந்து இற்றைநாள்வரை காளமேகம் முதலிய பெரியாருங்கூட 'வசைபாடிப் பின்னரதை இசையாக மாற்றினர்' எனப் படித்தலுங் கேட்டலுமரிது. இவர் ஒரு தாசியை வசையிற்பாடிக் கெடுத்தும், பின்னர் இசையிற்பாடி, அவளை வாழ்வித்தும் வைத்துளாரன்றே? இது 'குதிரை மாளத்தின்ற காளிங்கனேறும் குதிரை மாளக்கொண்டு போ' என்றும், பின்னர் 'குதிரை மீளக் கொண்டுவா' வென்றும் பாடிய கம்பரது திருவிளையாட்டை நமக்கு ஞாபகப் படுத்துகின்றது.

மேலும் நம்புலவர் பெருந்தகையாரது நாவினிடத்து அவரையறியாமலே கலைமகள் குடிபுகுந்து, கூத்தாடிக்கொண் டிருந்தாளென்பதற்கு இரண்டொரு திருட்டாந்தமட்டினுமே ஈண்டெடுத்துக்காட்டுதூஉம். சற்றேறக்குறைய இற்றைக்கு ஒரு நூறு வருடங்கட்குமுன் 'திருமுக விலாசம்' பாடியபோது ஓரிடத்தில் 'தெள்ளு தமிழ்சேர் திருவேளூர்க் கர்ப்பகமாம் பிள்ளையாரைப் பணியும் பேராளர்' என்று சொல்லி, அதற்கோர் எதுகை தேடி, 'அள்ளிநிதி செய்யும் நியமச் செயங்கொண்ட சோழீசர்' என்று முடித்திருக்கிறார். இவர் தம் பாட்டுக் கெதுகை தேடி யமைத்துக் கொண்டதைத் தவிர வேறொன்றையுங் கருதினா ரன்றென அவ்வாக்கின் போக்கா லறியலாம். இற்றைக்கிருபது வருடங்கட்கு முன்னர் நேமநகர வணிகமக்கள் ஆலயத்தைப் புதிப்பிப்பான் பொருட்டு, சுமார் ஒன்பது லட்சம் ரூபாய் வரையிலும் சேகரித்துத் திருப்பணி வேலை யாரம்பித்து, நமது நாவலப் பெம்மானது வாக்குப் படியே 'நிதியை அள்ளி அள்ளிச் செலவிட்டு' அக்கோயில் திருப்பணி வேலை முடித்துக் கும்பாபிஷேகமுஞ் செய்த

னர் என்பது குறிக்கொள்ளத்தக்கதல்லவா? ஒருவேளை இதை யறியாத வணிக மக்கள் சிலரொருவர் இருந்தாலும் இதன் மூலமா யாவது இனி யறிந்துகொள்ளுவரென நம்புகிறேம். பின்னுமோர் சமயம் இவர் அரியக்குடி கிராமத்திற்கு ஒரு பொதுக்காரியத்தை உத்தேசித்துச் சென்றிருந்தபோது ஆங்குள்ள பெரியார்கள் இவரை உபசரியாதிருந்து விட்டனர். "கொட்டினல் தேள்" என்றபடி இவர் வசைபாட எத்தனித்துத் திருவிருத்தமாக

"அரியக் குடிநகர மத்தனைபேப் ரத்தனையும்"

என்று தொடங்கும் போதே 'வந்தது மோசம்' என்று அவ்வூ ரார் ஓடோடி வந்து, இவரை உபசரித்துப் பிழையை மன்னிக்கும் படி வேண்டினர். உடனே மனதிரங்கி, வசையை இசையாக மாற்றவேண்டி, அவ்விருத்தப்பாவையும் வெண்பாவாக மாற்றி,

"அரியக் குடிநகர மத்தனைபேர் சுற்று
வரிசைக் குடியாக வாழ்க—பெரிய
தெரியாரைப் போன்றிருந்தார் தேடிவந்தார் பின்னர்
உரியாரைப் போன்ரு ருகந்து."

என்று பாடித் தகுந்தபரிசில் பெற்று வந்தன ரென்ப. இற் றைக்கும் அவ்வூர் ஒரு வரிசைக் குடியாகவே இருக்கிறதன்றி, "வேறு ஏதேனும் ஒரு மாறுதல் உண்டோ" என்பதைச்சிறி தாராய்ந்துணர்க. பின்னர் ஒருசமயம் நாட்டரசன் கோட்டை யில் இருந்துவந்த ஓர் அம்பலகாரன் தானொரு பிரபுவாகவேண்டு மெனத் தன்மீது ஒரு கவியியற்றித் தரல்வேண்டுமென்று கேட் டுக்கொண்ட தருணம் "காலம் சமயம் வரட்டும்" என்று சொல் லியிருந்தனர். 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டென்பது' போல அதைப்பற்றி ஒரு ஓலையில் எழுதி, மரியாதையின்றி அதை அவ்வூர்த் தோட்டி மூலம் புலவர் வீட்டுக்கனுப்பி வைத்தானுகவே, இவர் தைலமிட்டுக்கொண்டே அவ் ஓலையை வாங்கி வாசித்து, விஷ யமறிந்து, அவனது பேராசைக்காக விசனித்து,

"நல்லதம்பி யென்ருெருவன் நாட்டரசன் கோட்டையிலே
அல்லவென்று போவதற்கே ஆள்விட்டான் அம்மானை
அல்லவென்று போவதற்கே ஆள்விட்டா னுனுலும்
சொல்லவந்த தூதனொரு தோட்டியல்லோ அம்மானை
சொல்லவந்த தூதனொரு தோட்டி தா னுனுலும்
புல்லனவன் சுடுகாடு போனன்காண் அம்மானை"

என்று அவ்வோலையின் பின்புறத்திலேயே எழுதி விடுத்தனர். அத் தோட்டி திரும்புமுன் 'அம்பலகாரன் சுடலையே சென்று விட்டான்' என்பதும் கேள்விப்பட்டிருக்கிறோ மல்லவா? ஆகவே "இப்புலவர் ஒரு தெய்வத்தன்மை பொருந்தியவர்தாம்" என்பதற்கும், இவராலேயே வணிகமக்கள் இத்தகைய மேன்பாடுடையரா யிருக்கின்றன ரென்பதற்கும் இதைவிட வேறு ஒரு திருட்டாந்தம் இனியுங் கூறுதல் வேண்டுமோ? இனி நமது நாட்டுக்கோட்டை நகரத்தார்களிடம் யாம் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளப்படுவ தொன்றுண்டு. அஃதாவது:—

"பெரியாரைப் பேணு தொழுகில் பெரியாரால்
பேரா விடும்பை தரும்"

என்ற பொய்யா மொழிப் புலவர் மறைமொழியை ஞாபகத்தில் வைத்து, இவரது திருவாக்கான இந்நூலையாவது "கோடா கோடி நூல்களில் இதுவும் ஒன்றுதானே" என்று கருதிவிடாது, பொன்னேபோற் போற்றிப் பக்தி சிரத்தையுடன் அநுதினமும் பாராயணஞ் செய்துவருவதில் வீட்டுக்கொரு பெரியார் கண்ணுங் கருத்துமாயிருக்க வேண்டு மென்பதேயாம். 'ஏழைபேச் சம்பலம் ஏறுதுதான்' என்றாலும் ஏறுகிற சமயமும் வருமன்றோ? இங்ஙனந் திருவருள் கூட்ட எமது முத்தப்ப நாவலரடிகளே எமக்குத்துணை.

இதுகாறும் இவரினது சரித்திரத்தைப் பற்றிக் கூறிவந்த யாம், இனி இவரினது மரபினராகிய வணிகமக்களைப் பற்றியும் சிறிது கூறவேண்டியிருக்கிறது. புலவர் பஞ்சாட்சரவர்க்கபூஷணத் திற்கூறியாங்கு, இம்மரபினர் வர்த்தகம்புரிதல், தேவாலயம் புதிப்பித்தல், அறமியற்றுதல், கல்விவளர்த்தல் முதலிய அரும்பெரும் புண்ணியப்பேறு பெற்று, உலகில் புகழ்நாட்டி வருதல் போன்றே புதைந்துகிடந்த சங்கநூற்காப்பியங்களாகிய தொல்காப்பியம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, புறநானூறு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலைமுதலிய பன்னூற்பரப்புக்கும் பெரும்பான்மையும் இவர்களே காரணபுருஷரா யிருந்து வந்திருக்கிறார்கள். பெருங்காப்பியங்களுக்குள் இம்மரபினரது பொருளுதவி பெறாது வெளிவந்துள ஒரு நூலேனுங் காண்டலரிது. இங்ஙனமாக இற்றைநாள் வரை இவர்கள் தம்மரபிற்றோன்றித் தம்மரபு முன்னுற வேண்டுமெனப் பல பிரபந்தங்களிலும் இடையிடையே கூறி, வாய்த்த நிதியும், வள்ளற்றன்மையு மளித்த இப் புலவர்பிரானைப் பற்றியோ இவரினது நூல்களைப்பற்றியோ "ஒரு சிறிதேனுஞ் சிந்தித்தனர்" என்று தெரியவில்லை. ஈண்டிதற்கோர் உபமானம் வேண்டுமெனில்,

பரப்ரம்ம சொரூபமாகிய சாட்சாத்காரமே இக்ஷுவாகு குலத்தில் தசரதச் சக்கரவர்த்தி திருக்குமாரராக அவதரித்திருந்தும், அவர் மகிமை யின்னதென்று அறியத்தக்க விசேஷ ஞானமின்றிச் சக்கரவர்த்தி தனது புத்திரனுகப் பாராட்டிய படியான் மோட்ச சாதன ஐக்கியமிலே பெருது சுவர்க்கமடைந்தாரென்றும், கேவலம் படவு ஓட்டிக்கொண்டு திரிந்த குகன் என்னும் ஒரு வேடன் அவர் மகிமையறிந்து, அன்பின் சொரூபமாய் அவரைப் பூசித்து மோட்சசாதனத்துக்குப் பாத்தியப் பட்டானென்றும், அங்ஙனமே கிருஷ்ணுவதாரத்தினும் வசுதேவர் பரமாத்மாவை சர்வவியாபகரென்றறியத் தக்க விசேஷ ஞானமின்றித் தனது புத்திரனுகப் பாராட்டிய படியான் மோக்ஷ சாதனமாகிய ஐக்கியமிலே பெருது சுவர்க்கமடைந்தாரென்றும், கேவலம் அங்குள்ள ஒரு வேலைக்காரனுகிய ததீ பாண்டன் என்பான் அவர் மகிமையை யறிந்து, அன்பின் சொரூபமாய் அவரைப் பூசித்து,மோக்ஷ சாதனத்துக்குப் பாத்தியப்பட்டானென்றும் வேதம் வெளியிடுவதுபோல் குலத்தாலும் நலத்தாலும் ஆற்றலினுலும் அருளினுலும் அறிவாலும் புகழாலும் பெருமையுடையவராய் விளங்கிவரும் நகரத்தார் வம்சத்தில், எமது நண்பரும், இந்நூற் பதிப்பாசிரியருமான புதுவயல் ரா. ம. சு. ராமசாமி செட்டியாரவர்கள் இம்முத்தப்ப நாவலரது பூரண கடாட்சத்துக்குப் பாத்திரமுற்று, வற்ருத பாக்கியவந்தராய் இம்மைக்கேற்ற புவனபோகங்களை யனுபவித்துப் புத்திர பவுத்திர சம்பத்துடன் நீடூழிவாழத் திருவருளைச் சிந்திக்கின்றேமாக.

வெண்பா.

நேம நகருதித்து நின்றமுத் தப்பகவி
ராமசா மிக்குநலம் நல்குமாம்—யாம்புகல்வ
தேன்னே யவர்வாக்கால் ஏழுநக ரத்தாரும்
போன்னேபோல் வாழ்ந்துவரும் போது.

இங்ஙனம்,

நா. கிருஷ்ணசாமி நாயுடு,
தமிழ் வித்வான்,
மதுரை.

கடவுள் துணை.

குன்றக்குடி முருகபிரான் தம்மைப்பாடிவந்த
புலவர்க்கிரங்கி அன்னவர்பால்

எழுநகரத்தார்க்களித்த

திருமுக விலாசம்.

விநாயகர் தோத்திரம்.

நேரிசை வெண்பா.

இருநிதியஞ் சேருகின்ற வேழ்நகரத் தார்மேற்
றிருமுகவி லாசமது செப்ப—அருள்நேர்
குணபதியா மீசன் குழவியென வுற்ற
கணபதிபொற் றுண்மலரே காப்பு.

நான்முகம்.

கலிவெண்பா.

கங்கை நதிதரித்தோர் கண்ணுதலார் சூரனுக்குச்
சங்கையில்லா வாழ்வு தனைக்கொடுக்க அங்கவனுந்

தேவாதி கட்கிடுக்கஞ் செய்ததனு லிந்திரன்பாற்
றேவாதி கள்பலருஞ் சென்றடர்ந்து மேவுமத

வேழ யரனிடத்தில் மேவிச் சுரரிடுக்கந்
தூளாய்ப் பறந்திடவே சொல்லுமென்றார் வேளரன்பாற்

சென்று னமரர்சொன்ன செய்தியெல்லா மீசன்முன்பு
நின்றுங் குரையா னிகரின்மதன் மன்றன்மிகு

பூவாளி யச்சிவன்மேற் பொங்குமழை போனின்று
தூவினு னீசனிவன் துட்டனென்றே தாவியவன்

தன்னை யெரித்திடவே தானவரும் வானவரும்
பன்னுஞ் செபதபஞ்செய் பண்ணவருந் தன்னிலைவிட்

டோடிநா ரந்நா ளொருகோடி சென்றபின்பு
கூடினா ரிந்திரன்பாற் கோவென்றே நாடுமுன்னே
சத்தரிஷி மாதர் தமக்கக் கினிபகவான்
மெத்தமயல் கொண்டவன்தன் வீட்டில்வந்து சித்தம்நொந்தே
யன்ன மருந்தா திருந்தா னவன்சுவாகாள்
என்னவென்று ளுள்ள தியம்பினன் நன்னயமா
வென்றன் திராணி யினியறிவீர் சத்தரிஷி
துன்றுமட வார்களுன்னைத் தோயவே ஒன்றுமுத்தி
செய்வனென்றுள்நல்லதென்றுன் சிந்தைமகிழ்ந்தக்கினிதான்
மெய்பொடித்துச் சத்தரிஷி மின்னார்போல் மைவிழியாள்
ஆறுரிஷி மாதர்வடி வாகினு ளச்சுவாகாள்
தேறவொண்ணு வாசைதனைத் தீர்ப்பையென்று கூறியே
யொவ்வொருத்தி யாய்ச்சென் றுலகத்தில் தம்மனசு
செவ்வையொத்துக் கொண்டுமயல் தீர்ந்தனரே திவ்ய
அருந்ததியைப் போலவடி வாகமாட்டா துள்ளம்
வருந்திக் கணவனிடம் வந்தாள் திருந்திழைமா
ரின்னொருத்தி யேதுவர வில்லையென்று னுள்ளபடி
சொன்னவற்றைக் கேட்டுத் துயர்தீர்ந்தான் துன்னுமந்த
சத்தரிஷி யார்திருஷ்டி தன்னு லறிந்துகம
லத்துமட வாரை யருகழைத்துச் சத்தி
யருந்ததிகற் புக்குமுங்க ளாறுபேர் கற்பும்
புரிந்துபற்று தென்றே பகர்ந்து திருந்துஞ்
சரவணப்பொய் கைக்குள் தவசுசெய்வீ ரென்றே
யரிவையரைப் போமென் றனுப்பத் திருநுதலார்
சத்தரிஷி வாக்காற் சரவணப் பொய்கைவந்து
நத்துதவஞ் செய்து நனிசிறந்தார் அத்தெய்வ
மன்னவனுந் தேவர்களும் வந்தக் கினிபகவான்
தன்னை யருகழைத்துச் சாதனையா யின்னுமந்தச்
சூரன் செயுமிடுக்கண் சோமன் தரித்தவர்பால்
நீருரைத்து மீளுமென்றார் நேசமதாய்ச் சீருடனே
செல்லுமுன்னே மாலாய்ச் சிவனு மிடப்பாக
மெல்லியனு மொன்றுன வேளையிலே மெல்லநடந்
தக்கினியோன் பொற்கதவை யண்ணினன் மெய்வெளிச்ச
மிக்கசுடர் போலே விளங்கியதால் திக்கெனவே

திருமுகவிலாசம்.

சங்கரு மக்கினியோன் தன்னைக்கண் டேமனது
சங்கோச மாய்விரைந்து தாமெழுந்தார் அங்கவர்க்கு
விந்துபிர வேசிக்க வீறுமெழி லக்கினியே
வந்துகையி லேந்தெனவ மூத்தினர் அந்த
அரன்விந்தைத் தாங்கிநின்ற வக்கினியோன் தன்னைத்
திரமாக விங்கிதனைச் சேமித் துரமிகவே
தாட்டிகமாய்க் கொண்டு சரவணப்பொய் கைக்குளிதைப்
போட்டுவிடு மென்னப் புகன்றமொழி கேட்டவனும்
அக்கணமே யங்கதனை யந்தச் சரவணப்பொய்
கைக்குளிட்டு வந்தான் கருணையுடன் மிக்கதுவே
ஆறு குழந்தைகளா யக்கங்கை யிற்பிறந்து
மீறி விளையாடும் வேளையிலே கூறரிய
ஈசனு மீஸ்வரியு மேகாந்த மாயிருவர்
வாசமா மந்நதியில் வந்திடவே யீஸ்வரிபார்த்
திந்நதி யிற்குழந்தை யேதென்றுள் தேவர்பிரா
னுந்தன் குழந்தையென்று ருள்மகிழ்ந்து விந்தையுட
னாறுதலை யுஞ்சேர்த் தாவ லுடனாசை
மீறி யெடுத்துமடி மீதுவைத்தே யாறிரண்டு
காலு முருவுமிரு காலாக்கிச் சேர்த்தெடுத்து
வேலுமொன்றாய் மிக்ககரம் பன்னிரண்டாய்ச் சீலமுடன்
ஆறுசிர சாய்த்தேவர்க் காறுதலை யாமெனப்பே
ராறுமுக மென்றே யரனுரைக்க வீறு
முமையுந் திருமுலைப்பா லூட்டிக் கொடுபோஞ்
சமையத்தி லங்கே தவஞ்செய் யமைவுறுதோள்
சத்தரிஷி மாதரரன் தாட்பணிந்து தங்களுக்குப்
புத்தியென்ன வென்று புகன்றார்கள் அத்தரும்பார்த்
திந்தக் குழந்தைசொலு மென்ன வவர்கேட்கச்
சிந்தை மகிழ்மதலை செப்புமன்று முந்துலகிற்
கார்த்திகைநட் சத்ரங் கருதுவோர் தம்வினையைத்
தீர்த்தவர் தாங் கேட்டவரஞ் சென்றளிப்பேன் கார்த்திகைநட்
க்ஷேத்ரப் பதவியிலே செல்லுவீ ரென்று துய
ராற்றிமட வாரை யனுப்புவித்துச் சூத்திரங்கள்
செய்தசுவா காள்தனக்குஞ் சேவித்தோர் தங்களுக்கு
மெய்யிலங்கு பீடையொடு விக்கினங்கள் எய்துகின்ற

போதிவையெல் லாந்தீர்ந்து போகச்சு வாகாளென்
றோதவுட னேபயங்கொண் டோடுமே யாதலினு
லிந்தப் பெருமையுமக் கென்றே யவர்சொல்லச்
சிந்தை மகிழ்ந்து சிவனுமையும் பிந்தா
திடுக்கி யிருகரத்தா லேந்தியுமை யாள்பால்
கொடுக்க வளர்ந்த குமரேசா மடுக்கரையில்
வண்டாடும் பூங்கமல மாதுவிளை யாடிவளர்
குன்றுக் குடியிற் குமரேசா சென்றன்று
வீறு மசுரர்குலம் வேரறுத்துச் சூரனுடல்
கூறுய்ப் பிளந்த குமரேசா தாரணியில்
அற்றவர்க்குத் தாரகமா யண்டர்கள் நாட்டுக்குக்
கொற்றவனுய் வந்த குமரேசா வுற்றசுட
ரம்பனைய கண்ணுள்தெய் வானைகுற வள்ளியிரு
கொம்பனையர்க் கேற்ற குமரேசா நம்புதலாய்த்
தேடுமடி யார்தமது சிந்தைதனி லேயிருந்து
கூடிவிளை யாடுங் குமரேசா தாடாண்மை
யன்றசுரர் நெஞ்ச மதிற்கனக வேல்வாங்கிக்
குன்றுருவ வெய்த குமரேசா மன்றுள்
நலத்தையறி யாச்சமணர் நாலாயிரரைக்
கொலைக்கழுவி லிட்ட குமரேசா பலத்தெழுந்த
நீலநிறச் சேவலொன்று நித்தங்கை யிற்பிடித்துக்
கோலமயி லேறுங் குமரேசா சால
மிடிதீர்த் தமரர்தமை மிக்கதெய்வ லோகங்
குடியேற்றி வைத்தகும ரேசா படிபுகழுஞ்
சந்திர சேகரர்க்குந் தையலுமை சௌந்தரிக்கும்
சிந்தைகளி கூரவந்த சேயனே அந்தபுயர்
மான்மருகா கங்கை மகனேவேள் மைத்துனனே
வேன்முருகா யாவருக்கு மெய்ப்பொருளே கான்சே
ரொருமான் மகள்தனுட னுற்றதெய்வ மங்கை
யிருமா தருக்கு மிறைவா கருணை தரு
மும்மூர்த்தி யர்க்குமொரு மூர்த்தியே நால்வேதச்
சிம்மா தனத்திருக்குந் தேவனே செம்மைமிகும்
அஞ்சு முகனுதவு மாறுமுக னேயேழு
மஞ்சுலவு மங்கைமலை யோனே ரஞ்சிதமாய்

எட்டானைக் கொம்பைநெஞ்சி லேற்றிரத்னப் பந்திகளைத்
திட்டமுட னேயழுத்துஞ் சேவகத்திற் கெட்டியெனும்
பத்துமுடி ராவணனைப் பட்டுருவ வாளிதொட்ட
கைத்திரிகை யோன்மருகா காவலனே நத்துகிற
தன்னைந் தனித்தவர்க்குஞ் சாலப் பசித்தவர்க்கு
மன்னங் கொடுத்தா தரிப்பவனே சொன்னபடி
கார்த்திகைநட் சத்ரங் கருதுவோர் சஞ்சலத்தைத்
தீர்த்துப் பலன்பெருகச் செய்பவனே ஆர்த்தரிய
சட்டி விரதந் தனையநுட்டிப் போர்மகிழ
மட்டில்லாப் பாக்கியத்தில் வைப்பவனே திட்டமுடன்
சோமவா ரத்தைத் துதிப்போர்கள் தம்மனதில்
நேமமத னைக்கொடுக்கும் நேயனே பூமிபுகழ்
வெள்ளிக் கிழமை விரதமுற்ற மெய்த்தொண்ட
ருள்ளத்தி லேயிருக்கு முத்தமனே துள்ளுமதத்
தந்தி முகம்படைத்துச் சப்பாணி யாயிருக்குந்
தொந்திவயிற் றோனுக்குச் சோதரா சந்ததமுஞ்
சித்தசனு ருக்குந் திசைமுகனுக் குஞ்சிறந்த
மைத்துனனு வந்தமயில் வாகனு எத்திசைக்கும்
வீறு திருச்செந்தூர் மிக்கபரங் குன்றமுத
லாறுபடை வீட்டுக் கதிகாரா நீறணியும்
அக்கினிக்கண் ணன்கைலை யம்பதியா மீசனருள்
கைக்கனிக்குச் சுற்றிவருங் காங்கேயா திக்கடவி
மானுக்கும் பூமிமட மானுக்குஞ் சீதையெனு
மானுக்கு மிக்க மருகனென்றே மீனமதித்
தேரடியி னின்றிதெல்லாஞ் செப்பினேன் கேட்டுவெற்றிக்
கூரியவேற் கையான் குமரேசன் பார
விடும்பேச னைக்கூவி யிப்பொழுதே சென்றங்
கடிவாரத் தேயொருவ னுரோ திடமாகப்
பன்னுதமிழ் நம்மேற் பகர்கின்றான் நீவிரைந்தே
யன்னவனை யிங்கே யழையெனவே சொன்னவுடன்
தாக்கிடும்பன் வந்துன்னைச் சண்முகனார் கூட்டிவர
வாக்குரைத்தார் நீயுமின்று வாவெனவே பாக்யமெனச்
சென்றே னவர்பாற் சிகண்டிமலை யாதிபனைக்
கண்டேன் மனது களிகூர்ந்தேன் கொண்டாடிக்

தோத்திரங்கள் செய்தேன் சுகந்தங்கள் வீசுதிருக்
காத்திரத்தைக் கண்டேன் கருணையுடன் சாத்துபடிச்
செந்தா மரைத்தடமுந் திவ்யகரம் பன்னிரண்டும்
சந்த்ரோ தயம்போலச் சண்முகமும் விந்தைபெறுஞ்
சேவற் கொடியுஞ் சிறந்தமயில் வாகனமும்
மூவர்மன மெச்சு முனைவேலுந் தேவர்மட
மாதுவள்ளி யம்மை மகிழ வினிதிருக்குங்
கோதறுதேன் வாயான் குமரனையென் தீதறவே
கண்டேன் மனத்திற் கவலை வறுமையெல்லாம்
விண்டே னெனதுடலம் விம்மினேன் அண்டர்பணி
கந்தா கடம்பா கதிர்வேலா கங்கைபெற்ற
மைந்தா மயூர கிரிவாசா நந்தாக்
கருணைக் கடலே கனிந்துருகிப் பாடு
மருணகிரி நாதர்க் கருள்வோய் திருவிருக்கும்
பூங்கொடியாள் வள்ளி புனத்துக் கொருகிழவாய்
வேங்கைமர மாகிநின்ற வேலோனே பூங்கமலத்
தண்ணலை வன்சிறைக்குள் ளாக்கிவைத்தாய் சூரைவென்று
விண்ணவர்க்கு மிக்கசிறை மீட்டுவந்தாய் அண்ணனுக்கு
நன்னயமா கச்செவியில் நற்பிரண வப்பொருளைச்
சொன்னவனே சூழுஞ் சுடரொளியே என்னையின்று
காப்பாற்ற வேண்டுமென்றேன் கந்தர்திரு வாய்மலர்ந்து
வாய்ப்பா யுரைத்ததமிழ் வாணனே தாப்பாயுன்
னூரையுமுன் தந்தை யுயர்வான பேரையுமுன்
பேரையுஞ்சொல் லென்றார் பிரியமுடன் சீர்பெறவே
விற்பனஞ் சேரருணை வீரபண்டா ரத்தின்மகன்
சுப்பிர மண்யனென்று சொன்னேன்நான் அப்போதி
லிந்தநகர்க் குன்னூ ரிரைங்கா தங்கடந்து
வந்ததென்ன வென்று வழுத்தினார் சந்ததமும்
போகா வறுமை புலிபோல வென்னுயிரும்
பாகாருந் தன்மைப் பசுப்போல வேகமுறும்
துன்பக் கருடனுடன் தோயரவ மென்னுயிரு
மின்பமணு வத்தனையு மில்லாமல் முன்புகண்ட
நச்சரவைப் பாய்ந்து நடனமிடுந் தோகைமயில்
பச்சோந்திக் கஞ்சும் பழைமையைப்போல் மெச்சுசெல்வ

மில்லா வறுமைபினு லில்லாள்முன் வாய்பேசச்
செல்லாமல் நெஞ்சந் தியங்கியே நல்லோர்கள்
கூடுசபைக் கேகமனங் கூடாம லேவிரைந்தே
யோடி யொளித்தும் உரமற்றும் வாடுவதால்
நாடுதொறுஞ் சென்று நடந்தலுத்துப் பேர்கேட்டு
மூடர்களைப் பொல்லாத மூர்க்கர்களைப் பாடுதமிழ்க்
கீயாரைச் சார்ந்தோர்க் கிடுக்கண்செய் வோரைமிகத்
தீயாரை மாறுச் சினத்தோரைப் பேயான
சண்டாள ரைப்புரட்டுச் சல்லியரை யேழைமுகங்
கண்டிரங்கா லுத்தக் கயவர்களைக் கொண்டாடி
காமனென்றுஞ் சோமனென்றுங் காண்டிபனென் றும்பலத்தில்
வீமனென்றும் மிக்க விதுரனென்றும் பூமிபுகழ்
தென்ன னென்றும் மிக்க திருமாலென் றுங்கொடைக்குக்
கன்னனென்றுஞ் செல்வக் கனகனென்றும் நன்னயஞ்சேர்
மேருவென்றுங் கொண்டலென்றும் வேண்டியதெ லாங்கொடுக்குந்
தாருவென்றும் பாடிச் சலித்தலுத்துச் சீருயர்ந்த
பாட்டா லிசைநாட கத்துறைக் கோர்பழைய
வேட்டியாய்ப் பத்து விருத்தமுடன் சீட்டுக்
கவிக்கோவோர் நாள்வயிற்றுக் கஞ்சியாய் வெண்பா
செவிக்கினிய முத்தமிழுஞ் சேரப் புவிக்குளொரு
பாக்குக்கும் வெற்றிலைக்கும் பாவிகளைப் பாழ்த்தபழஞ்
சாக்குக்கும் பாடிச் சலிப்பாகி நாக்குலர்ந்து
ஏடும்புண் ணாகி யெழுத்தாணி யுந்தேய்து
பாடு மனமும் பரதவித்தே யேடெழுதிச்
சுண்டுவிர லுங்காய்த்துத் தொண்டைகம்மல் பாடியதாற்
கண்டதல்லா லோர்பலனுங் கண்டிலேன் வண்டரவர்
செப்புமுலை வேசையர்க்குந் திக்குந் திருடருக்குந்
தப்புமுன்னே கட்டித் தலைகீழாய் மெய்ப்பூஞ்ச
லாட்டுவார்க் குஞ்சவுக்கோ டைந்துமணிக் கயிற்றின்
மூட்டுவார்க் குங்கொடுப்பார் மூடரவர் பாட்டுனர்க்குச்
செய்யா ரினியிவர்பாற் செல்வதினிற் சாரமில்லை
யையா வெனைநீநன் காதரித்துத் தொய்யாமற்
காவென்றே னப்பொழுது கந்தர்திரு வாய்மலர்ந்து
வாவென்றென் னோடு வசனிப்பார் மேவியநீ

யென்பாலுன் பாட்டை யியம்பவந்தாய் நற்புலவா
நின்பாலென் பாட்டை நிகழ்த்தக்கேள் அன்பாவென்
தந்தையுமோர் பெண்ணைச் சடையில்வைத்தா ரச்சடையி
லந்தமிலா வூமத் திலேயணிந்தார் மூந்த
விடுகாட் டெலும்பை யெடுத்தணிந்தா ரன்றிக்
கடுவா யரவுகழுத் திட்டார் திடமொடுறுந்
தொண்டர் தமையுண்டார் சூழ்ந்தகடல் நஞ்சையுண்டார்
கண்டிருந்தும் பிள்ளைக் கறியுண்டார் கொண்டாடிச்
சீர்வேட னெச்சிலுண்டார் தின்றதெல்லாம் பற்றும
லீரே ழுலகு மிரந்துண்டார் பாரறியப்
பிட்டுக்கு மண்சுமந்தார் பின்னே விறகுவிற்றார்
மட்டுக் கடங்கா வளையல்விற்றார் திட்டமுடன்
வில்லடியும் பட்டார் விசையன்கை யாலொருவன்
கல்லடியும் பட்டெம்பு கண்ணினர் நன்மதுரை
மாறன் பிரம்படியும் வாங்கினர் பால்தனக்காய்
வீறிடையன் கையறிவாள் வெட்டுண்டார் கூறரிய
சூலா யுதம்படைத்தார் தொல்வேடன் தன்செருப்புக்
காலா லுதைக்கக் கனிந்திருந்தார் சீலமுடன்
மாடெடுக்கப் பெற்றார் மருட்கொண்டார் தில்லைதனி
லாடெடுத்தா ரென்றுபெய ராயினர் தாடாண்மை
யும்பர்தொழுங் குற்றாலத் தூரி லுயர்ந்திருக்குங்
கும்பமுனி கையாற் குறுகினர் செம்பதும
வேதன் சிரசிலொன்றை வெட்டினர் மன்மதனைப்
பாதாதி கேசமெல்லாம் பார்த்தெரித்தார் சூதாய்த்தேர்
வண்டிக்கா லிற்சோமன் மைந்தனையும் போட்டரைத்தார்
சண்டனெனு மேமன் தனைவதைத்தார் சென்றெதிராய்
முப்புரத்தை வென்றகதை மூவுலகி லுள்ளவர்கள்
செப்புகின்றார் கேட்டால் சிரிப்பாமே யிப்படியென்
தந்தை பிரபலங்கள் தாயார் வளப்பமதை
யுந்தனுக்குச் சற்றே யுரைக்கக்கேள் பிந்தாம
லம்பலத்தி லாடினு ளம்புவிக்குந் தாயானாள்
கம்பந்தி யிற்றவசு கைக்கொண்டாள் கும்ப
முலைகளுமூன் றானாள் முனைப்புலித்தோல் போர்த்தாள்
மலையரைய னுக்குமக ளானாள் பலவலைஞர்

சாதியிற்சேர் தாள்சத்தி தானென்று எம்மலைமேல்
நிதறவே வீற்றிருக்குந் தேவியந்த மோது
முருமாறி யேகுறத்திக் கொப்பாகச் சென்று
கருமாறி நின்று களித்தாள் பரிவாகச்
செல்லா யிரங்கோடி சீவர்க் கிருநாழி
நெல்லாற் படியளந்த நீலியென்பார் சொல்லுவதென்
தந்தைபட்ட பாடனைத்துந் தாயார்க்குண் டேபுலவா
சொந்தத் தமையனையுஞ் சொல்லக்கேள் முந்தவன்னை
தந்தைக்கு முன்பிறந்தார் தந்திமுக மானுரோர்
விந்தைப் பெருச்சாளி மேற்கொண்டார் முந்த
வாதக்கா லானுர் வயிறு பெரிதானுர்
பாதைகுளம் வீதி பலவிடங்கள் மீதிருந்தே
அன்னையைப்போற் பெண்தேடி யாயாச மாய்மனதி
லுன்னி மரத்தூரி லுட்காந்தார் பின்னையென்றன்
மாமன் வரலாற்றை வழுத்தக்கே ளுந்திதனிற்
பூமனையும் பெற்றுர் புவிபுரக்க நேமி
பதித்தார் துளசிப் படையணிந்தார் பாம்பை
மிதித்தார்பா லாழிமேல் மெள்ளக் குதித்தோ
ராலிலையின் மேற்றுயின்று ராவையுமே யோட்டிவருங்
கோலிலுந்தான் பள்ளிகொண்டார் கூசாமற் சால
மனையாளை செஞ்சில்வைத்தார் மாமோ கினியா
யெனையீன்ற தந்தையுயி ரீந்தார் கனமாய்
அரியர புத்ரனென்றே யாண்பிள்ளை பெற்றுர்
தெரியாத பேர்களுண்டோ செப்பும் பெரியதொரு
ஆடகனைக் கொன்றங் கவன்குடலை மாலையிட்டுக்
கூடிருக்க ரத்தங் குடித்துவிட்டார் கோடியெனு
மாய்ச்சிமுலைப் பாலையுண்டா ராவ லடங்காமற்
பேய்ச்சிமுலைப் பாலும் பிடித்துண்டார் வாய்ச்செருக்காய்ப்
பாடி தனிலுள்ளோர் பாற்பொங்க லிட்டதெல்லாங்
கூடியுண்டார் பாற்றயிருங் கொள்ளைகொண்டார் நாடறிய
மண்ணையுண்டார் பாடி மடவா ரறியாமற்
கண்மருட்டி யாட்டைக் கவர்ந்தெடுத்தார் வண்மை
குருந்தேறிக் கொண்டார் குதிரை கிடையாமற்
பருந்தேறிக் கொண்டார் பகட்டாய்ப் பொருந்தவே

காய்ச்சியபால் தன்னைக் களவாண்டு தன்னுடைய
ஆய்ச்சிகையாற் கட்டுண் டடியுண்டார் கூச்சமின்றி
யாடவராய் மிக்கபதி னாறு யிரமாதர்
கூடவே யுள்ளங் களிகூர்ந்தார் மோடிசெய்து
மாமனையுங் கொன்றுவிட்டார் வஞ்சகமா யண்ணனையும்
பூமிபிர தக்ஷணமாய்ப் போகவிட்டார் நேமி
பானு தனைமறைத்தார் பார்த்தனுக்குத் தேரோட்டிக்
கானிலுறை யைவரையுங் காத்திருந்தார் மேன்மையுடன்
சொல்லவொணு வஞ்சத் துரியோத னாதிகளைக்
கொல்ல வகைவிவரங் கூறினார் சொல்லுவதென்
பாரினிலே பொய்பிரட்டுப் பண்ணியகிஷ் டேமெல்லாம்
யாருமறி வார்களது வல்லாமற் சீர்கிழவிக்
கூனும் நிமிரக் குறித்தெய்தார் மாரீச
மானெய்தார் தென்னிலங்கை வாழரக்கன் சானகியைக்
கொண்டேக மிக்கசிறைக் கோலமுற்ற பெண்ணைநத்திச்
சென்றழைத்துக் கொண்டவசை தீராதே வண்டரக்கர்
மாள வகைதொடுத்தார் வந்த விபிஷணரை
யாள வகைதொடுத்தார் அவ்விலங்கை கேளின்னும்
வஞ்சகப்போ ராய்மறைந்து வாலியைக்கொன் றார்காட்டில்
தஞ்சமற்ற பெண்பிள்ளையைச் சங்கரித்தார் ரஞ்சிதமாய்க்
கல்லைப்பெண் ணாக்கிவிட்ட காலாந் திரன்செய்தி
சொல்லத் தொலையாதே சொற்புலவா நல்லதினி
யெந்த னியற்செய்தி யியம்பக்கேள் யாவருக்குங்
கந்தனென்று பேரானேன் கள்வரைப்போல் முந்தமுந்தக்
கோழி பிடித்தேன் குறத்திதனை மாலையிட்டேன்
பேழை வயிற்றனுக்குப் பின்னானேன் நீள்கூந்தல்
வேடிச்சிக் காய்வனத்தில் வேடனைப்போற் சென்றுபலர்
கூடி நகைக்கக் குடிபுகுந்தேன் நாடறியத்
தந்தைக் குபதேசஞ் சாற்றினே னப்பனுக்கு
விந்தைக் குருக்களென்றார் மேதினியார் தந்தைவெகுண்
டானாலும் பிள்ளை யதிகப்ர சங்கியென்று
மீனாக்கி யேகடலில் விட்டுவிட்டார் நானிலத்தி
லோர்பிறவி யானே னுயர்சிவிகை யேறுவர்முன்
கூர்மபிலின் மீதேறிக் கொண்டிருந்தேன் பார்போற்ற

வெண்ணீ றணிந்தேன் மிருகடப்பத் தாரணிந்தேன்
கண்ணீரா ருனேன் கருணையுடன் பண்ணுகவிக்
காம்புலவா கேட்டிலையோ வாண்டி தனையடித்தாற்
சாம்பற் பறக்குமென்பார் தாரணியில் மாம்பழத்துக்
காகவே நான்கையை யம்பதியைச் சுற்றுமுன்னே
தாகத்தா லென்தமையன் தந்தைதனை வேகமாய்ச்
சுற்றி யடிபணிந்து சூதாய்க் கனியதனைப்
பற்றிக்கொண் டார்நான் பதறியே முற்றி
வருகோபத் தாலேமா தாபிதா தேடத்
திருவா வினன்குடியிற் சென்றேன் பரிவாக
அன்னைவந்தா ளென்னை யழைத்தா ளொருதரமே
யென்னபிள்ளாய் செய்த குறையாங்கள் முன்னஞ்
சகிப்பா ரிலையா தமையன் புசித்தாற்
பகைப்பாரோ மாம்பழமோ பாரந் தெவிட்டாப்
பழநி யெனவே பகர்ந்தா ளதனாற்
பழநியென்றும் பேரானேன் பண்பாய் விழவார்
மலைவா யலைவாயில் வாழ்க்கையுற்றேன் பின்னுஞ்
சொலல்வேண்டு மென்றால் தொலையா நிலையிருப்பு
வேலொழிய வென்கையில் வேறுபொரு ளுண்டானாற்
சாலவுரைப் பாய்நான் தருகிறேன் ஞாலமிசை
பங்கமில்லை நாங்களிங்கு பட்டபா டெல்லாமோர்
சங்கதியாய்ச் சொன்னேன் தமிழ்ப்புலவா வெங்கள்பிழைப்
பிப்படியெல் லாமிருக்க வென்பாலி லுன்துயர
மெப்படிச்சொல் வாயென் றியம்பினு ரப்போ
துரல்மத் தளத்திடைப்போ யுற்றதுயர் சொன்ன
அருமையீ தென்றதிச யித்துக் கருணையுடன்
தாமரைசூழ் வாவி தனிற்போன வண்டுகெஞ்ச
மாமதுவைத் தானுமுண்ணு மற்போமோ நேமிதிரு
மாலுக்கா கப்பயந்து வந்துதஞ்ச மென்றுசொல்லச்
சீலக் குருச்சேத் திரன்தனக்காய் ஞாலமிசைத்
தாராரு நீள்விசயன் தாமோ தரனுடனே
போராடிக் காத்ததுவும் பொய்யலவே பேரன்பு
காக்கும் வகைக்கரனர் காலன் தனையுதைத்து
மார்க்கண்ட னைக்காத்த வாறதுபோல் தீர்க்கமுட

னென்னை யடர்கலிக ளெல்லாந்தீர்த் துப்பவிஷ்டு
தன்னைக் கொடுத்தாள் தயாபரா அன்னைபிதா
நீயே யெனக்கல்லால் நீடுகதி யில்லையென்றேன்
மாயோன் மருகன் மனமகிழ்ந்து நேயமுடன்
தன்மைய தாமோ தனக்குவந்த கார்யமதிற்
பின்னுக்கு வாங்குவரோ பேருலகில் நன்னயமாய்
மிக்கசன மாய்த்தனது வீட்டில் விருந்துவந்தாற்
பக்கத்தில் தள்ளுவதும் பண்பலவே யக்கதைபோல்
நானே யுனையழைத்தேன் நாவலா நீசும்மா
தானேகச் சம்மதியேன் சாற்றக்கேள் ஏனவர்கள்
பார்த்திவர் காவிரிப்பூம் பட்டினத்தின் முன்வைஸ்யர்
கோத்திரத்தின் மிக்க குபேரனைப்போல் வீற்றிருக்கு
மந்நாளிற் பாண்டிநகர்க் கானகுடி வேண்டுமென்று
தென்னுடன் தேசிகர்பாற் சென்றுரைத்து முன்னுன
மெத்த வுபசாரம் வேண்டுவதெல் லாமுரைத்துச்
சித்தந் திரும்புதற்குச் செய்திசொல்லி நித்தியமாய்த்
திங்களுல குள்ளமட்டுந் தேசிகரே யென்னுட்டி
லுங்கள் மரபிற் கொருக்காலும் பங்கம்
வரவொட்டே னென்று வலக்கை கொடுத்தே
புரவிரத மீதமர்த்திப் போற்றிப் பரிவாய்
வளமை யுடனழைக்க வந்தே நலமா
யிளையைமா தைப்பதியி ருந்தார் களிகூர்ந்தே
யஞ்செழுத்தை யுட்செவிப்போ ரல்லும் பகலுமெனை
நெஞ்சில் விட்டு நீங்காத நிண்ணயத்தார் ரஞ்சிதமாய்த்
திருமாற் கடிமைசெய்வோர் தெய்வமெல்லா மொன்றென்
றுரிமையுடன் போற்றுமறி வுற்ருேர் ரிருநிதியம்
வேண்டினு ருக்குதவி மிக்கநலந் தான்பெற்ருேர்
பாண்டிநா டாள்வோன் பதம்பணிவோர் நீண்டபுகழ்த்
தேசாதி பர்புகழுஞ் செய்ய திருப்புனவை
யாசா னழக ரடிபணிவோர் நேசமுட
னன்னைதந்தை தெய்வமுத லாசானைப் போற்றுதலாய்
மன்னவரைக் கூட வணங்காதார் முன்னுயர்ந்த
மேருகிரி யுரைத்தும் வேழந் தனைநிறுத்தும்
பேருலகில் மிக்கான பேரானுர் யாரு

மதிசயிக்கக் காவேரி யாறுதனைப் புஞ்சப்
பொதியா லடைத்தபுக ழாளர் மதியாற்
கடலி லெறிந்தபொன்னைக் காசினியோர் தாமெச்
சிடவழைத்த வேலெல சிங்கர் நெடுங்கிணற்றில்
வீம்புக்குத் தன்வீட்டு வெள்ளாட்டி பொற்சவடித்
தாம்பிட்டு நீரிறைத்த தாஷ்டியர்கள் தேம்பவே
கல்யாண வாயிலிலே காவணக்கா லுக்குயர்ந்த
நல்பவளக் காலதனை நாட்டினேர் வல்லிரவில்
மர்கதவு வெள்ளிதனை வாங்கிவிட வக்கணமே
பொற்கதவு நாட்டிப் புகழ்படைத்தோ ரிப்புவியில்
சிரகப்பூந் தாரணிந்தோர் சிங்கக் கொடிபடைத்தோர்
காரனைய செம்பொன் கவிக்கீவோர் பார்புகழுங்
கத்த னிளைசைக் கைலாய நாதரையும்
நித்தியகல் யாணியையும் நேர்பணிவோர் நத்தினரை
யாட்கொண்ட நாதருட னுஞ்சிவபு ரத்தேவி
தாட்கமலம் போற்றிவளர் தாட்டிகர்கள் வேட்காம்
வடிவாரும் பேட்டை வளரொளியோர் மிக்கத்
துடிவுடையா ளைப்பணியுந் தூய்வர் படிபுகழுந்
தெள்ளு தமிழ்சேர் திருவேளூர்க் கற்பகமாம்
பிள்ளையா ரைப்பணியும் பேராள ரள்ளிநிதி
செய்யும் நியமச் செயங்கொண்ட சோளீசர்
தையலார் சௌந்தரியைத் தாள்பணிவோர் வையமகிழ்
பூவுடைய வூரிற் புகழ்தே சிகரடியோர்
பாவுடைய மாதி னடிபணிவோர் தேவர்புகழ்
வேலி னமரின் மிகுத்தகண் டீசரொடு
சாலவுங்கா மாட்சிபிரு தாள்பணிவோர் மேலிப்பை
தான்தோன்றி யீசரையுஞ் சங்கரியை யும்பணிவர்
மான்மதஞ்சே ருந்துளவ மார்மார்பர் தேன்சிறந்த
மாதைப் பதியில் வளருமைஞ்னுற் றீசர்மகிழ்
காதல் பெரியவளைக் கைதொழுவோர் சாதகமாய்
ராசசிங்கம் வாழ்பூமி நாதர்சிவ காமியையும்
நேசமுடன் போற்றி நிறைந்திருப்போர் வாசனையாய்
நானிலத்தோர் கொண்டாட நம்மிடத்தின் மிக்கவன்ன
தானமடங் கட்டிவைத்த தாளாளர் மேன்மைத்

திருவா வினன்குடியிற் சென்றெதிர்த்த பேர்க்குத்
தருவாய்க் கொடுக்குமன்ன தானர் இருநிதியம்
நாடறியப் பூவுலகில் நான்முந் திரிதேடிக்
கோடி யளிக்குங் கொடையாளர் தேடிநிதி
மாயேஸ் வரர்பூசை மாரு தரிபூசை
சேயார்மும் மூர்த்திப் பிரதிஷ்டை மாயாத
வூருணிகள் கூபமிவை யுண்டுபண்ணி மிக்கதர்மந்
தாரணியிற் செய்திட்ட சற்புருஷர் வாரஞ்
சிகரத்தி லேற்றிவைத்த தீபம்போ லேழு
நகரத்தார் யாரும் நமதடியார் மிகவவர்கள்
வீரருணைக் காக்க வேண்டித் திருமுகமுந்
தாரே னவரிடத்துத் தாஞ்சென்று பூரணமாய்க்
கண்டுவணி கேசரிரு கையில் திருமுகத்தைக்
கொண்டு கொடுத்தால் கொடையாளர் தொண்டர்சூழ்
குன்றக் குடியிற் குமரர் திருமுகமீ
தென்றுடனே வாங்கி யிருகணொற்றி நன்றுபெற
வுன்னை யடர்கலிக ளோடக் கனகநிதி
தன்னைக் கொடுத்தா தரிப்பார்கள் சொன்னபடி
செல்லுவா யென்று திருமுகமுந் தந்தெனது
வல்லவினை நீங்க வரமளித்தார் நல்லதென்றே
வாங்கினே னுனல் மனதினிலோர் சந்தேக
மீங்கதனைக் கூறவோ வென்றேன்யான் பாங்குடனே
கூறலா மென்றவருங் கூறினர் நானதற்கு
நீறளா வும்மேனி நின்தகப்பன் மாருத
அன்பின் பெருக்கா யடுத்துவந்த தொண்டனுக்குத்
துன்பந் தவிர்ப்பே னெனச்சொல்லிப் பின்பங்கோ
ரோலை யெடுத்தே யொருகவிதை தானெழுதி
யாலவாய்ச் சங்கத்தா ரையடுத்துச் சாலவே
யீவாய்நீ யன்னவர்க ளெல்லோரு மேவாங்கி
நாவார வாசித்து நன்குணர்ந்து மாவாரன்
நம்பாண் டியன்மகிழ நாடும் பொருளுரைப்பார்
செம்பொற் கிழியவர்க்குச் சேரவே கம்பத்தில்
கட்டிவைத்த நல்ல கனமாந் திரவியங்க
ளட்டியில்லா துன்றனுக்கே யாங்களிப்பர் தொட்டணைத்துத்

தூக்க முடியாது தூக்கியே கொண்டுபோ
யூக்கமொடு வாழென் றுரைத்தபடி சீக்கிரமாய்ச்
சென்றவரு மந்தத் திருமுகத்தை யாவலொடு
நின்றவருந் தான்கொடுக்க நேர்பிரித்து நன்றுபெற
வோங்கிப் படித்தா ருரையுணர்ந்தா ரன்றவர்க்குத்
தாங்கிப் பணமுடிப்பைத் தந்தபோ தாங்கிருந்த
நக்கீர ரென்னுமொரு நாவலனா் இப்பாடல்
மிக்கபிழை யென்றே விரட்டிவிட்டார் துக்கமொடு
பேசவா யற்றுப் பெருநினைவு கொண்டேதான்
ஊசலாய்ப் போனதென வுள்ளுடைந்தே யீசன்பால்
பாவமந்த ஏழைப் பரதேசி யேமாந்து
தாபமாய்ச் சென்றகதை தானுமோ ஆபத்தில்
ஆறுதலை செப்பியே யாத்ரிக்கு மாறுதலைப்
பேரு ரமுதேநீ பேசென்றேன் தேறுதலை
பின்னு மெடுத்துரைத்தார் பேதையவன் நக்கீரன்
பன்னு கலையுணர்ந்த பண்டிதன்தான என்னபயன்
பத்தி நிலையுணரான் பார்த்தும் பரமனையே
பித்தாநின் பாடல் பிழையென்றான் அத்தனவர்
நெற்றிக்கண் கொண்டவனை நேர்சிறிது நோக்கிடவே
பற்றியுடல் வெந்து பதறினன் உற்றெனமேல்
ஆற்றுப் படையோதி யஞ்சலித்தான் நான்சென்று
சாற்றினேன் மெய்ஞ்ஞானந் தானறிய ஏற்றவனை
யாதரித்தேன் நீயந்த அஞ்ஞான மந்தனைப்போல்
போதரித்தே னூரேடும் பொன்நகரார் நீத
வெழுநகரத் தார்களையும் எண்ணாதே என்னை
வழுவா தவர்மனத்துள் வைத்தே தொழுவார்கள்
வாவென்றால் நான்வருவேன வந்தனையா நல்லசுகந்
தாவென்றால் நான்தருவேன் சார்ந்தவர்க்கு மேவுமந்த
விண்ணாட் டதிபதிக்கு மெய்த்தசே னாபதியாய்
மண்ணாட்டி லின்னவர்க்கே மாபதியாய் வண்ணமொடு
வாழ்கின்றே னுங்கவர்கள் வாய்த்த நிதிபெருக்கி
யேழ்நகரை யாள்கின்றார் ஏகென்றார் வீழ்ந்துபணிந்
திங்கிதமாய் மெய்கூர்ந் தினிதாய் நடந்துகொற்ற
மங்கலத்திற் சென்றேன் மகிழ்ந்துபொதுச் சங்கதியாய்க்

கூடி யுலகாயி கோயிலுக்கு நேர்வடக்காய்
நாடி விடுதிக்குள் நல்லசுகம் நீடிவளர்
மாவுக்கு மேற்காய் வணிகேச ரெல்லாருங்
காவணத்துக் குள்ளிருந்தார் கண்டேன்நான் பூவணத்த
இந்திரனைப் போலிருந்த வேழுநக ராதிபர்க்குக்
கந்தர் திருமுகத்தைக் கைகொடுத்தே னந்தமுடன்
வித்தாரக் கைவாங்கி வேலர் திருமுகத்தை
வைத்தார் சிரசில் வணிகேசர் அத்தருணம்
குன்றுக் குடியிற் குமரர்பா லென்துயரைச்
சென்றுங் குரைத்ததுவும் தேவபிரான் நன்று
சலிப்பை யுரைத்ததுவுஞ் சாகரந்தான் சுட்டாற்
கலக்கச் சலமுண்டோ கந்தா நலத்துடனே
யென்கவலை தீரவகை யேதெனயான் கேட்டதுவும்
நன்மைக் குபேர நகர்வணிகர்க் கன்பாங்
திருமுகத்தைத் தந்ததுவுஞ் செப்பினே னுங்கு
மருவுநிதி மிக்கவணி கேச ரொருமையுடன்
வந்த திருமுகத்தை வாசித்தா ரப்போது
சிந்தைமகிழ்ந் தேயஞ்சல் செப்பினர் சொந்தமுற
வேணு நிதியீந்தார் மிக்கவஸ்தி ரங்கொடுத்தார்
பூணுமெனத் தங்கநகை பூட்டினர் கோணுதே
யுண்டிருக்க நெற்கொடுத்தா ரூரும் பலவாகக்
கண்டிருக்க மெத்தக் கனஞ்செய்தார் கொண்டாடித்
திட்டமுட னேவணிகர் செய்யுங்கல் யாணமதிற்
கட்டளையா யோர்பணமுங் கண்டெழுதிச் சட்டமுடன்
சாதனமுந் தந்தெனது சஞ்சலமெல் லாந்தீர்த்தார்
மாதனவா னுகவென்னை வாழ்வித்தார் பூதலஞ்சேர்
துங்கமலை யான்வாழி துய்யதமி ழோர்வாழி
யெங்கும் படியா ளிறைவாழி மங்களமாய்
வாழுங் குமரேசர் மாராசர் தென்னிளைசை
யேழு நகரத்தார் வாழியே.

திருமுகவிலாசம்

முற்றிற்று.

உ

சிவமயம்.

ஜெயங் கொண்டார் சதகம்.

இராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கை சமஸ்தானம்
கிளைச்சேவற்பட்டு
இளையாத்தங்குடி எழுநகரமென்று சொல்லப்பெற்ற
நேமநகரத்திலவதரித்த
அழகப்பசெட்டியார் குமாரர் கடாட்சகவி
முத்தப்பசெட்டியார் அவர்களியற்றியது.

மதுரைத் தமிழ் வித்வான்
ஸ்ரீ நா. கிருஷ்ணசாமி நாயுடவர்களால்
எட்டுப்பிரதி கொண்டு
ஒப்ப நோக்கிப் பரிசோதிக்கப்பெற்று
இராமநாதபுரம் ஜில்லா, சிவகங்கை சமஸ்தானம்
புதுவயல்
ராம. சு. ராமசாமி செட்டியார் அவர்களால்

மதுரை ஸ்ரீ மீனம்பிகைப் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றது.

Register]   1925.   [*Copy-right.*

முகவுரை.

திருவேங்கட சதகம், குமரேச சதகம், அரப்பளீஸ்வர சதகம், தண்டலையார் சதகம், கோவிந்த சதகம், எம்பிரான் சதகம், ஜெயங்கொண்டார் சதகம், என எழு சதகங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும், அவை ஒவ்வொன்றிலும் உபமான உபமேயங்களுடன் பல நீதிவிஷயங்கள் புகுக்கப் பெற்றிருக்கின்றன வென்றும், அவைகளை இயற்றினவர் ஒவ்வொருவரும் முறையே கடாட்ச கவி வல்லுநரென்றும் நந்தமிழ் நாட்டிலுள்ள மாணவர், மாணவச் சிறுமிகளுங்கூட நன்குணர்வர். ஏனெனில் நீண்டகாலந்தொட்டு கிராமங்கள் தோறுமுள்ள ஏட்டுப்பள்ளிக்கூடங்களிலும் அவைகளைப் பாடமாக வைத்திருப்பது பற்றியாம். நிற்க ஜெயங்கொண்டார் சதகமென்னும் இந்நூலியற்றிய புலவரேறு இற்றைக்குச் சற்றேறக்குறைய தொண்ணூற்றைம்பான் வருடங்களுக்கு முன்னர் இளையாத்தங்குடி எழுநகரத்தார் என்னும் நாட்டுக்கோட்டை நகர தனவைசியர் மரபிலவதரித்து, எழுநகர வைவியர்களையே சிறப்பித்து, எழாவது சதகமாக உலகில் நிலைபெறுமாறு இதை இயற்றினர் என்ப. இது இந்நூலின் ஆரம்பத்திலேயே "பாக்கியஞ்சேர் எழுநகர வணிகர்" என்றமைந்திருத்தலால் அறியக் கிடக்கும். இவரினது திருநாமம் கடாட்சகவி முத்தப்பசெட்டியார் என்று தமிழுலகு சாற்றும். ஆனால் இவர் ஏதோ அருமையான சிற்சில நூல்கள் இயற்றியுள்ளாரென்பதற்காக இவர் மரபினரானது நகரவைவியர்கள் இவரைப்பற்றியும், இவர் நூல்களைப்பற்றியும் பாராட்டுதல் வேண்டுமென்பது எமது நோக்கமன்று. என்றாலும் இப்புலவர்பிரான் திருவாக்கின் பின்னரே மிகவும் எளியநிலையிலிருந்துவந்த இம்மரபினர் கோடீஸ்வர தனவந்தனராய்ப் பல நாடுகள் தோறும் சென்று, கொடுக்கல் வாங்கல் செய்தும், வியாபாரங்களைப்பெருக்கியும், பலபல பாடல்பெற்ற சிவாலயம் விஷ்ணுவாலயங்களைப் புதிக்கியும், கும்பாபிஷேகஞ் செய்வித்தும், அன்னதான முதலிய பலதருமங்கள் நடத்தியும் "தோன்றிற்புகழொடு தோன்றுக வஃதன்றேல் தோன்றலில் தோன்றாமை நன்று" என்ற பொய்யா மொழிப்படி புகழோச்சி வருகின்றனர் என்பதை இனியேனுஞ் சிறிதளவுணர்ந்தால் இவரையும், இவரியற்றியுள பலசில நூல்களையும் இம்மரபினரும், பிறருங்கூட எவ்வாறு போற்றிவருதல் வேண்டு மென்பதுதானே புலனுறும்.

இங்ஙனம்

நா. கிருஷ்ணசாமி நாயுடு,

தமிழ்வித்வான்,

மதுரை.

உ

சிவமயம்.

ஜெயங்கொண்டார் சதகம்.

காப்பு.

விநாயகர்துதி.

சீர்பொருந்துந் தென்னேமச் செயங்கொண்ட சோளீசர் திருப்பேர்வாழ்த்திப், பார்பொருந்துங் குறுவிருத்தப் பாமாலை தனிலுலகப்பழமைச்சொல்லை, யேர்பொருந்துஞ் செந்தமிழால் யான்பாடப் புவியிலுள்ளோ ரிசைந்துகேட்க, நேர்பொருந்துந் துதிக்கரத்தான் வெயிலுகந்த கணபதிதாள் நிதங்காப்பாமே.

முருகர்துதி.

நகரமெல்லாம் பணிந்தேத்துஞ் செயங்கொண்ட சோளீசநாயனார்மேல், மகரநெடுங் கடலுலக வதந்தியைச்செந் தமிழால்யான் வழுத்துதற்கே, யகரமுத லவ்வெழுத்தென் றாதியின்முப் பாற்சொன்ன வவன்றாள்போற்றிச், சிகரவரை மீதெழுந்த சிறந்தவடிவேலவன்தாள் சென்னிசேர்ப்பாம்.

கலைவாணிதுதி.

சிலைவேளை வென்றபிரான் தென்னேம நகரில்வளர் செயங்கொண்டார்மே, லுலகிலுள்ளோர் வழக்கமதாய்ச் சொன்னசொல்லைத் தமிழாலே யுரைப்பதற்குக், கலைவாணி யாகியுல குள்ளமட்டும் படிக்கவந்த கவிதைமாதா, மலர்வேதன் மனைவியென்றன் மனத்திலிருந் திவ்வுரையை வழுத்துவாளே.

அவையடக்கம்.

பத்தருளத் தினிற்கூடுந் தண்டலையென் றெமக்குரைத்த பரமர்மீதில், வித்தகர்முன் னுலகவழக் கதனையெடுத் தொருநூறு விருத்தஞ்செய்தா, ரத்தைநிக ரெனச்செயங்கொண் டார்மீதில் முத்தப்பன்சிற் றறிவினாலே, மத்தகயந் தனக்குமுன்னே சிற்றெறும்பு நடந்ததென வசனித்தேனே.

பாயிரம் முற்றிற்று.

நூல்.

விநாயகர் மாங்கனி பெற்ற கதை.

செய்க்கரிய துண்டோமாங் கனிமுத்த மகன்கேட்கச் சிவனீந் தார்முன், வாய்க்கினிதக் கனிநமக்கேன் தரவிலேயென் றிளைய மகன் மலைபோய்ச் சேர்ந்தார், பாக்கியஞ்சே ரெழுநகர வணிகர் தொழுஞ் செயங்கொண்டார் பரவுநாட்டில், தாய்க்குவிளைந் தானு மென்ன தனக்குவிளைந் திடவேண்டித் தவஞ்செய்வாரே.

வான்மீகர் கதை.

நல்வேட வான்மீகர் சப்தரிஷி களைச்சேர்ந்த ராமமந்த்ரஞ், சொல்லநா வியலாது கற்றறியா மையின்மரா மரமெனருர்முன் வில்விசையன் தெவ்வைவெல்லக் கணைகொடுத்த செயங்கொண்டார் விளங்குநாட்டில்,கல்விதனக் கழகுகச டறமொழித லெனமுன்னோர் கழறுவாரே.

மார்க்கண்டர் கதை.

அருமறைமார்க் கண்டர்நித்தந் திருக்கடவூர் வேணியனை யன் பாய்ப்பற்றி, வருசமன்தன் பகையடக்கித் தீர்க்காயு ளாய்ப்புவியில் வளராநின்ருர், தருவைநிகர் தென்னேமநகரில்வளர் செயங்கொண் டார் தமிழ்சேர்நாட்டில், பெருமரத்தைச் சுற்றிநின்ற பல்லியுஞ்சா காதெனவே பேசுவாரே. (உ)

பாண்டவர்கள் கதை.

பெருமைசெறி பாண்டவர்கள் பங்காளி கொடுமையினூற் பெருங்காடாண்டு, மொருமையுட னுதிட்டிரன்செய் நன்றியினுல் திரும்பவும்வந் துலகையாண்டார், பருவரைவில் லாவளைத்த செயங் கொண்டா ரேயெவரும் பண்பாய்ச்செய்த, தருமமே தலைகாக்கு மதர்மமழித் திடுமெனவுஞ் சாற்றுவாரே. (௩)

இளையான்குடிமாறர் கதை.

உழுதிளையான் குடிமாறர் முளைவாரி யன்னமன்பர்க் குதவிப் பாரில், வழுவாத கீர்த்தியுட னொருநாளுங் கேடில்லா வாழ்வுபெற் ருர், மழுவேந்துங் கரதலத்தார் செயங்கொண்டார் வளநாட்டின் மறைகளோதித், தொழுவாரெல் லாமுழுவார் தலைக்கடையி லென் றுலகஞ் சொல்லும்மாதோ. (௪)

கிரவுஞ்சம்பிளவுபட்ட கதை.

தஞ்சமெனச் சரண்புகுந்த வமரர்களைப் புரப்பதற்காச் சரவணத்தின், * மஞ்சனெனத் தோன்றியசெவ் வேள்வடிவே லாற்க்ரவுஞ்சமாய்ந்ததன்றோ, செஞ்சரணத் தால்யமனை வென்றசெயங் கொண்டவரே தேவரேனும், வஞ்சநெஞ்சைப் பிளக்குமது பொய்யல்லவுலகில்நிச வசனந்தானே. (ரு)

இராமர் கதை.

அரியோனைக் கௌசிகன்பால் விடமலைத்தான் தசரதன்விட்டதற்கிலாபங், கரியோன்தா னதிகபராக் கிரமனுமாய்த் தனுவினுக்குங் கமலத்தாட்கு, முரியோனு னதுமுனியா லென்றோவிச் செயங்கொண்டா ருலகந்தன்னில், பெரியோரைத் துணைக்கொளென்றவெமதௌவை வாக்கியத்திற் பிசகிராதே. (சா)

இராமர் வனவாசஞ்சென்ற கதை

பானுகுல ராமனுக்குப் பட்டாபிஷேகமெனப் பகர்ந்தபோது கூனியொரு சூத்திரத்தைக் கொடுக்கவவ னூரைவிட்ட கொள்கைபோல, மானணியுங் கரத்தாரே செயங்கொண்டா ரேபுவியின் மகிமைசேர்ந்த, யானைநிழல் பார்க்கையிலே தவளைவந்து கலக்கிவிடுமதுமெய்தானே. (எ)

இராவணன் கதை.

தொடைக்கிலங்கு மார்பனிலக் குமணன்வில் வலுவென்றுன் சொன்னபேச்சை, யடக்கிரா வணனுளை யோரம்பால் நான்வெல்வேனரியென்றுப்போல், சடைக்கிதழி மாலையணி செயங்கொண்டாரேயெதிரி தளத்துக்கஞ்சிப், படைக்குப்போ காதவர்கள் நல்லசேவகரெனவும் பகருவாரே. (அ)

வாலிசுக்ரீபர் கதை.

பேரிலுயர் வாலிசுக்ரீ பர்களிரு வரும்பகையாய்ப் பிரியராமர், காரியத்துக் காகவந்து கடலடைத்துச் சிறைமீட்ட கணக்குப்போலே,மேருவைவில் லாய்வளைத்த செயங்கொண்டா ரேயுலகில் விளங்குமோர்சொல், ஊரிரண்டு பட்டதென்றுற் கூத்தாடிக் கேலாபமுண்டென்பாரே. (கூ)

---

* மஞ்சன்—மைந்தன்.

மூதேவி சீதேவி பிறந்த கதை.

செல்லோடே யிணங்குகடற் றிருவுடன்மூத் தாள்பிறந்த செய் திபாரில், நல்லோடைச் சலத்தில்சில பாசிபடர்ந் திடலதுபோல் நவிலும்பார்த்தன், வில்லோடே மோதியதோட் செயங்கொண்டா ரேவயலில் விளைவுண்டான, நெல்லோடே பதருமசந் தனிலதரும் பிறந்திருக்கும் நேர்மைதானே. (கo)

சரஸ்வதி கம்பரை நீங்கிய கதை.

நங்கைகலை வாணிகம்ப ரிடத்திருக்கத் தண்டிகையில் நலமாய் வாழ்ந்தா, ரங்கவள்தான் புறம்போக அன்னவருங் கூலிக்கோ ராளானரே, செங்கையுகி ரால்வேதன் சிரத்திலொன்றைத் துணித் துவிட்ட செயங்கொண்டாரே, சுங்கம்மா றியபோது சுண்ணும்புங் கொடுக்காரிப் புவியுளோரே. (கக)

வாமனன் அரிச்சந்திரன் கதை.

தாப்பாய்வா மனன்கையில் மாவலிதண் ணீரைவிட்டுத் தரணி தோற்றுன், வாப்பியவான் கோசிகன்தன் வஞ்சனையா லரிச்சந்த்ரன் மனைவிவிற்றுன், தீப்போலே விழிகாட்டி மதனுடலை யெரித்துவிட்ட செயங்கொண்டாரே, பார்ப்பார்க்கு வாய்ப்போக்கொண் ணுதாண் டிக் கதுதானும் பகரொணுதே. (கஉ)

திருஞானசம்பந்த சுவாமிகள் கதை.

பண்ணுருஞ் சம்பந்தர் திருநீற்றுல் வழுதிசுரம் பரிந்துதீர்த்தார், எண்ணுயி ரஞ்சமணர் திருநீற்றை மறந்துகழு வேறிமாய்ந்தார், பெண்ணுளைச் சடையில்வைத்த செயங்கொண்டா ரேயுலகிற் பெரு மைசேர்ந்த, வெண்ணீறே வினையகற்றும் நீறில்லா நெற்றிபாழ் மே வுந்தானே. (கங)

துரியோதனன் கதை.

புள்ளாலே பொறியரவத் துசன்மடிந்தால் தருமருக்குப் பொரும் போருண்டோ, துள்ளாடத் திருப்பிவிட்டுப் பின்பவனைச் செயிக்க மிகத் தொல்லையாச்சே, வெள்ளானைக் கிறைபணியுஞ் செயங்கொண் டா ரேவலிமை மிகவுமீந்தார், முள்ளாலே யெடுப்பதனைக் கோ டரியா லெடுக்கவந்த முறையீதாமே. (கச)

அசம்— கட்டுக்கிடையா யுள்ள நெல். அதர்— தூசி.

அகலிகை கதை.

பண்டகலி கையையிந்தி ரன்களவாய்த் தழுவிவெளிப் படுங் காலத்தைக், கண்டுமுனி சகியாம லிருவரையுஞ் சபித்ததினாற் கன வீனந்தா, னிண்டைபுனை சடையாரே செயங்கொண்டா ரேபுவியி லில்லாள்பேச்சைக், கொண்டவன் தூற் றும்போதே கூரையுந்தான் தூற்றுமெனக் கூறுவாரே. (கரு)

தாரை கதை.

கடலீன்ற சந்திரனைக் குருமனைவி கலந்தணையக் கருதிவாவென் றிடவுமதி யதுசமயம் பின்வருவ தறியாம லிணங்கினனே, சடை யிலங்கக் கங்கையணி செயங்கொண்டா ரேமுறைக்குத் தாயென் றுலும் நடைபெறுகா மத்துக்குக் கண்ணில்லை யென்றுலகர் நவிலு வாரே. (கசு)

காந்தக்கற்கோட்டையழிந்த கதை.

சுத்துமதிற் கலிங்கசிந்து சூழுசிக் காந்தமெனுந் துருவந்தன் னை, யெத்தும்வில மாதர்களாற் பண்டுகரு ணாகரன்வென் றிட்டா னன்றோ, கைத்திகிரி யோன்பணியுஞ் செயங்கொண்டா ரேமிகுந்த கருத்துண்டான, புத்திமான் பலவானு மென்றுலகோர் சொல்லுவ தும் பொருந்துந்தானே. (கஎ)

தருமர் கதை.

ஆளைப்போல் வருமிருகந் தனக்கும்வீ மனுக்கும்வழக் கான தியாய,வேளைக்கா தரவுதர்மர் வீமனுடல் பாதிமிரு கத்துக்கென்றார் வாளைவயல் புகுநகர வணிகர் தொழும் செயங்கொண்டார் வாழும் நாட்டில், நீளப்பால் வார்த்தாலும் நடுச்சொல்வா ரறிவுமிகு நிறை யுள்ளோரே. (கஅ)

வாலிமறுசனன மேடுத்த கதை.

விழியெதிர்நில் லாதொளித்து வாலியைமா லெய்துகொன்று விடவேயந்நான், வழியுடனே மறுசனன மெடுத்தரியை யெய்து பழி வாங்கினனே, எழில்மழுமா னணிகரத்தார் செயங்கொண்டார் நன்னாட்டி லெவரானாலும், பழிக்குப்பழி வாங்காது போவதில்லை யென்றுலகோர் பகருவாரே. (கக)

அம்பிகாபதி கதை.

அரசன்மக ளாரையம்பி காபதிசேர்ந்ததனை மன்ன னறிந்தும் பன்னாள், வரச்சகித்தாங் கொருநாளத் தாட்சியுட னவனுயிரை

வதைத்தானன்றோ, பரசணியுங் கரத்தாரே செயங்கொண்டா ரேமிகுந்த பழக்கமேனுஞ், சரசமிஞ்சி ரவிக்கையிற்கை போடவொண்ணு தென்றுலகோர் சாற்றுவாரே. (உ0)

விபீஷணன் கதை.

கும்பகன்ன னுக்கிளையோன் தமையனுயிர் நிலைகாட்டிக் கொல்லென்றேநி, கும்பலைக்குந் துறவுசொல்லித் தன்குலத்து வலுவை முற்றுங் குறைத்தானன்றோ, செம்பிநன்னாட் டவர்புகழுந் தென்னேம நாட்டில்வளர் செயங்கொண்டாரே, தம்பிபிறக் கத்தரையாமென்றிடுஞ்சொல் லரக்கனுக்கே தகுங்கண்டீரே. (உக)

கண்ணன் மலையைக்குடையாயெடுத்த கதை.

கல்லான மாரியையிந் திரனனுப்ப வாய்ப்பாடிக் கண்ணன்கம்பு, வில்லேது மின்றியொரு கற்குடையால் வந்தமழை விலக்கினாரே, செல்லாருங் குழலிசௌந் தரியையிடப் பாகம்வைத்த செயங்கொண்டாரே, வல்லார்க்குப் புல்லுமோ ராயுதமா மென்பதுமெய் வாக்யந்தானே. (உஉ)

சூர்ப்பநகை மூக்குமுலை யறுபட்ட கதை.

உருக்குதலும் நயத்தலுமார் சூர்ப்பநகை யிலக்குமண னுயர்தோள்சேரச், சுருக்கினிற்சென் றடுக்கவவ னிணங்காமல் மூக்குமுலை துணித்தா னன்றோ, மரைக்கிசைந்த கரத்தாரே செயங்கொண்டாரேமிகுந்த மயலுண்டாகிச், சிறுக்கிமன தறியாமற் செடிதனைக்கையினிற்றாக்கித் திரிந்தவாறே. (உங)

சீதை கதை.

தேன்மொழிச்சீ தையையரக்கன் சிறையெடுத்து வனத்தில் வைத்துச் சென்றிறஞ்சி, ஞன்மிரட்டிப் பார்த்துமவள் கற்பழியாதக்கினியி லமிழ்ந்துமீண்டாள், மான்விழியாள் சௌந்தரிபா காசெயங்கொண் டாரேநின் வளஞ்சேர்நாட்டில், தான்பதிவி ரதையானல் தேவடியாள் வீட்டினிலுந் தரிக்கலாமே. (உச)

அருச்சுனன் கதை.

பண்டுகிணற் றினிலெறிந்த பௌத்திரத்தைத் துரோணர்சிலைப் பாணம்போட்டுக், கொண்டுவரப் பார்த்ததனஞ் சயனுமந்த விற்றொழில்கைக் கொண்டானன்றோ, வண்டுவிழியுமைபாகா செயங்கொண்டா ரேயுமது வளஞ்சேர்நாட்டில், கண்டதைக்கற் கின்றவனேபண்டிதனு வானென்று கழறுவாரே. (உரு)

நளனைப்பாம்புகடித்த கதை.

நண்ணிடுமோர் வனமெரிய மேற்கிடந்த பாம்பைநலி யாமல் தாங்கி, மண்ணில்விட்ட நளன்கரத்தி லதுகடித்தே யவனுடலை வடுச்செய்தாற்போல், வெண்ணிலவைச் சடையில்வைத்த செயங் கொண்டா ரேகுடியின் மெலிவுதீரப், புண்ணியத்துக் குழமெரு தைப் பற்பிடித்துப் பார்ப்பரெனப் புகலுவாரே. (உசு)

ஓரரசன்பெண்சாதியின் கதை.

நயவேந்தன் மனைவியொரு துன்மார்க்க னாசைகொண்டு நடந்தே யாற்றி, லியல்புடனே போய்ச்சலத்தில் நின்றதைச்சிந் தாமணியி லியம்பினரே,கயல்விழியா ருமைபாகா செயங்கொண்டா ரேதனது கணவன்போலே, யயல்விட்டா னெவனெனினு மாபத்துக் குதவா னென் றறைகுவாரே. (உஎ)

சேதுபதி ராசன்மகள் கதை.

பெண்ணைவாழ்க் கைப்படுத்தச் சேதுமன்னன் குறித்தவிடம் பிசகிமேலாங், கண்ணர்பரி சோதனைக்குந் தப்பிவிதிப் படிமுடவன் கைக்கொண்டானே, பண்ணுலவு புகழ்மேவுஞ் செயங்கொண்டா ரேழுவர் பாலித்தாலு, மெண்ணெய்யைத்து டைத்திடலா மெழுத் ததனைத் துடைப்பவர்க ளில்லைதானே. (உஅ)

குஷ்டரோகியின் கதை.

பண்டுகுட்ட ரோகியுந்தான் பாரதங்கேட் டான்நோயும் பஞ் சாயோடி, விண்டுவருகையிற் கதையைப் பொய்யென்றான் மறைந்த குட்ட மீறிற்றன்றோ, தண்டமிழுக் கருள்புரியுஞ் செயங்கொண்டா ரேயெந்தத் தலத்துமீச, னுண்டென்ற பேர்க்குண்டு மில்லையென்ற பேர்க்கில்லை யுண்மைதானே. (உகூ)

மனுநீதிச்சோழன் கதை

முன்னொருசோ ழன்புதல்வன் தேர்க்காலி லான்கன் று முரியக் கண்டே, பின்னதற்கீ டாய்த்தனது பிள்ளையைத்தேர்க் காலிலிட் டுப் பெருமைபூண்டான், தென்நேம நகரினில்வாழ் சௌந்தரநா யகிமகிழ்ந்த செயங்கொண்டாரே, தன்னுயிர்போல் மன்னுயிரைத் தாழவுவர்தே வர்முனிவர் தமக்கொப்பாரே. (ங௦)

4

இந்திரசித்தன் கதை.

கண்ணார்படை தனைச்செயிக்க விந்த்ரசித்தன் நிகும்பலையைக் கருதிச்செய்தே, நண்ணியயா கமுமுடியுந் தருணமதி லிலக்குமணன் நாசஞ்செய்தான், மண்ணையுண்டோன் நனிபுகழும் செயங்கொண்டா ரேகோல மத்தூடாடி, வெண்ணைபடும் வேளையிலே தாழியுடைந் திடுதன்முன்செய் வினையென்பாரே. (நுக)

இராவணன் கதை.

அற்புதரா மன்கைவனு முதனுட்சண் டைபிலரக்க னறிந்தும் புத்தி, சொற்பமகோ தரன்பேச்சைக் கேட்டலவோ குலத்தோடுந் தலைந்துபோனன், தற்பரச தாசிவனே செயங்கொண்டா ரேநல்யோசனையில்லாத, துற்புத்தி மந்திரியா லரசுக்கே யீனமென்ற சொல் மெய்தானே. (நுஉ)

சகராள் கதை.

ஆவலாய்ப் பரிதேடிக் கபிலரிஷி யிடத்திற்போ யகம்பாராட்டித், தாவியவெஞ் சினத்தாலே யறுபதின யிரம்பேர்கள் சகராள் மாண்டார், காவலுறு தென்நேமச் செயங்கொண்டா ரேபொறுமை கருதிச்செய்யாக், கோபமே பெரும்பாவ மதுசண்டா ளம்மெனவுங் கூறுவாரே. (நுங)

இராக்கதன் கதை.

ஆற்றையணி தேநோக்கி யொருநிருதன் தவசுசெய்ய வவனுக் கேவாள், கூற்றையுதைத் தோனனுப்பக் குறுக்கிற்சென் றிலக்குமணன் கொண்டானன்றே, நாற்றிசையும் பணியவருஞ் செயங்கொண்டா ரேயனந்த நாளாயொட்டிக், காத்திருந்தோன் பெண்டுதனை நேற்றுவந்தோன் கைக்கொண்ட கதையீதாமே. (நுச)

பாரதக் கதை.

விதுரனும்வில் முறித்தான்கன் னனும்பாம்புக் கணை திரும்ப விட்டானில்லை, யெதிரிபடை தனைத்துரியோ தனன்செயிக்கப் படைத்தலைவ ரிணங்கினரே, மதுரையிலிங் தனம்வளையல் விற்றசெயங் கொண்டாரே மருவார்போரில், குதிரைநட வாவிடின்மா வீரர்பறந் திடுவாரோ கொக்காய்த்தாமே. (நுரு)

இந்தனம்—விறகு.

தருமர்செய்த அன்னதானக் கதை.

சாத்திரவே தியர்வதிட்டர் தருமரது சத்திரத்திற் சார்ந்தங் குண்ட, மாத்திரமே லட்சமறை யோர்புசித்தா லோங்குமணி மலி ந்தாடும்மே நேத்திரத்தால் நிலவுமத னுடலெரித்த செயங்கொண் டார் நிமலர்நாட்டில், பாத்திரத்தை யறிந்துபிச்சை யிடவேண்டு மென்றுலகோர் பகருவாரே. (௩௬)

கிருஷ்ணன் தருமரைப் பொய்சொல்வித்த கதை.

அன்பான தருமரசு வத்தாமா வெனும்யானை யமரில்வீழ, வன்பான புயவசுவத் தாமர்பட்டா ரெனப்பிசகி வழுத்தலாச்சே, முன்பாத வன்னெயிற்றைப் பறித்தெறிந்த செயங்கொண்டார் முத ல்வர் நாட்டில், தன்பானை தனைச்சாயப் பிடிப்பதுண்டோ வெவரு மென்று சாற்றுவாரே. (௩௭)

பாண்டவர்கள் போருக்குச்சென்ற கதை.

மன்னர்துரோ ணரையோனுன் கொடுபோயிற் றென்றொரு சொல் வழுத்தக்கேட்டே, பொன்னிரத மேறியம்பு வில்லெடுத்தை வருஞ்சமர்க்குப் போனாரன்றோ, நன்னயவே தன்சிரத்தி லொன்று துணித் திட்டுசெயங் கொண்டார்நாட்டில், சின்னப்பாம் பானாலும் பெரியகம்பா லடியென்றே செப்புவாரே. (௩௮)

அச்சுதவாணன் கதை.

வேணியரனைப்பணியு மச்சுதவா ணக்குருசில் வெள்ளாண்மை ச்சீர், ஆணியவல் லமையால்மூ வேந்தரையுங் காவலில்வைத் தவதி செய்தான், பாணிமழு வணிசெயங்கொண் டாரேயெத் தொழில்க ளுக்கும் பழுதாங்குண்டும், காணியைநட் டுக்களத்தில் நிற்பதுவே நன்மையெனக் கருதுவாரே. (௩௯)

தக்கன் கதை

கயிலைத்தா னுவைப்போலே மறுசிவனை யுண்டுபண்ணக் கரு தித்தக்கன், செயலற்றே செய்வேள்வி யுங்குலைந்து வேற்றுமுகஞ் சேர்ந்தானன்றோ, அயிலைப்போல் விழியுமைசேர் செயங்கொண்டா ரேயிந்த வவனிமேலே, உயரத்தான் பறந்தாலு மூர்க்குருவி பருந் தாகா துண்மைதானே (௪௦)

பாணி - கங்கைக்கு இது ஆகுபெயர்.

தக்கன்மகத்தில் வந்த தேவர்கள் கதை

ஆணவத்தக் கன்மகத்தி லவியுணவந் திடுதேவ ரவர்களெல்லாம், நாணமொடு மானபங்க முற்றனரே வீரபத்ர நாதராலே, பாணியின்கண் மழுவணிந்த செயங்கொண்டா ரேருசியும் பசியும் பார்க்கு, மூணருந்தங் கருமமிழந் திடுவரென்ற பழமொழிதா னுண்மைதானே. (சக)

இந்திரன் நளனைத் தூதுவிட்ட கதை.

வனத்திறையிந் திரன்நளன்பாற் சென்றுனக்கு மாலையிடும் மாதைத்தான்நீ யெனக்குவரும் படிபேசித் தமயந்தி தனையிணக்கித் தாவென்றானே, சினக்குமர வணிந்தடியார் கவலையெலாந் தீர்த்தருளுஞ் செயங்கொண்டாரே, உனக்குமழை பெய்யுமிப்போ தெனக்கிறைவை நீர்தாவென் றுரைத்தவாறே. (சஉ)

பிரமனைச் சிவன் சபித்த கதை.

கஞ்சனுக்குப் புவியினிற்கோ யிலுட்பூசை யில்லையெனக் கடிந்தீர் மீண்டுங், கெஞ்சினபின் மறையவர்செய் பூசையெல்லா முனக்கெனவே கிருபைசெய்தீர், பஞ்சவனுக் காய்மாறி நடித்துசெயங் கொண்டாரே பகைவரைத்தா, னஞ்சிநல்ல வார்த்தை சொன்னால் பொல்லாப்பு வருவதில்லை யவனியோர்க்கே. (சங)

அகலிகை சாபந்தீர்ந்த கதை

முனியகலி கையைக்கல்லாய்ச் சபித்துசிவர்த் திக்கும்வழி மொழிந்தவாறு, மனுவேந்த னாகியேமால் நடந்திடுந்தாட் படப்பழைய வடிவானாளே, தனவானைத் தோழனென்ற செயங்கொண்டா ரேயெவர்க்குந் தலைநாட்செய்த, அனுபோகந் தொலைந்திடும்போ தமிழ்த முஞ்சித் திக்குமென்ப ரவனியோரே. (சச)

விபீஷணன் மகுடம்பெற்ற கதை.

வளமையுள்ள ராமனைவி பீஷணன்சேர்ந் திலங்கைமணி மகுடம்பெற்றான், தளரரக்க ருடனிருந்த மர்க்குவந்தா லவனையொக்கச் சரிப்பாரன்றோ, களபமணி தனத்திசௌந் தரிபாகர் செயங்கொண்டார் கனத்தநாட்டில், அளப்பரிய அஷ்டரைக்கண் டால்தார விலகுதல்நன் றமென்பாரே. (சரு)

அரிச்சந்திரன் கதை

செப்புமரிச் சந்திரன்தான் நீசனுக்கே விலையாகிச் சென்றே நெஞ்ச, மொப்பிமயா னமுங்காத்த நிமித்தியத்தா லிழுக்கவனுக் கொருபோதுண்டோ, மைப்படியுங் கண்ணிசவுந் தரிபாகர் செயங்கொண்டார் வளஞ்சேர்நாட்டில், குப்பையிலே கிடந்தாலுங் குன்றிமணி நிறத்திலொன்றுங் குறைவுறுதே. (சகூ)

அமராவதியேன்பவள் கதை.

வணக்கமுடன் சித்திரபுத் திரரையமரா வதிதான் வணங்கிப் பொங்க, லிணக்கமுடன் செய்யாத நியமத்தா லவட்குமெத்த விட ரெய்திற்றே, அணைக்கடலின் மேல்நடந்த முகில்பணியுஞ் செயங் கொண்டா ரருள்சேர்நாட்டில், கணக்கனுக்குக் கைக்கூலி கட்டி யன்றோ குடியிருக்கக் கடனென்பாரே (சஎ)

விடத்திற்குப்பயந்தவிஷ்ணு கதை

கடியவிடம் பாற்கடலில் தோன்றியபோ தருகிருந்த காருத் தன்தான், நெடியபயத் துடன்நீங்கி மேனிகரு நிறம்படைத்தான் நிசமதன்றோ, கொடியிடைப்பெண் சௌந்தரியா ளிடப்பாகர் செயங்கொண்டார் குலவுநாட்டில், படையும்நடுங்கியேயோடும் பாம் பென்றா லெனப்பெரியோர் பகருவாரே. (சஅ)

பஞ்சதந்திரக் கதை.

திறமுளசஞ் சீவகனைத் தமரகன்கண் டழைத்துவந்து சிங்கத் துக்கு, மிறையுளமந் திரியாக வைத்தபின்சிங் கந்தனக்கு மிடபத் துக்குங், குறைவில்பகை யுண்டுபண்ணி விட்டதன்றோ செயங் கொண்டார் குலவுநாட்டி, லுறவுடையன் போலிருந்துங் குளவி யைப்போற் கொட்டுவர்க ளுண்டென்பாரே (சகூ)

அறிவீனன் அரசன்மேற்பாடிய கதை

அறம்பெற்ற சோழனைமண் ணுண்ணிமரப் பாவையென்றே யதி லோர்பாட்டாய், வெறும்பித்தன் சொல்லிவர வேந்தர்சபை யோர் கள்பொருள் விளங்கச்சொன்னார், திறம்பெற்ற பரிசுகொண்டான், தென்நேம நகரில்வளர் செயங்கொண்டாரே, யெறும்புக்குந் தன் கையா லெண்சாண்மெய் யென்றுலகோ ரியம்புவாரே. (ருo)

கர்ணமகாராசன் கிண்ணங்கொடுத்த கதை.

வாழிரவி சுதன்வலக்கை யாலெடுத்துக் கொடுக்குமுன்னே மனம்வேறுமென், றேழைமறை யோர்க்கிடக்கை யாலேயெண் ணெய்க்கின்ண மீந்தானன்றோ, ஆழிதனிற் பள்ளிகொள்ளு மால் பணியும் செயங்கொண்டா ரரியநாட்டில், நாளையென்பார் கொடைதனக்கன் றப்பொழுதே யில்லையென்றல் நலமதாமே. (௫௧)

விசுவாமித்திரன் வெற்றியடையாத கதை.

புகழரிச்சந் திரனிசவா னெனவதிட்டர் சொலவவனைப் பொய்யனுக்க, மிகவெகுண்டு சபதமிட்டே யானமட்டும் பார்த்தயர்ந்து விசுவாமித்ரன், செகமறிய மக்கினப்பட் டிருந்ததையா வருமறிவார் செயங்கொண்டாரே, முகடுமுட்ட வருங்கோபந் துரும்புகுத்த வேலையென மொழிந்தவாறே. (௫௨)

சுப்பிரமணியர் கதை.

அண்ணலருள் சரவணவேள் புனக்குறப்பெண் வெயிலினிற்கு மவதிபார்த்துத், தண்ணுலவு வேங்கைமர நிழலாலன் றவள்வருத்தந் தனைத்தீர்த்தாரே, விண்ணவர்க்காய் விடத்தையுண்ட செயங் கொண்டா ரேகனந்தான் விளங்குநாட்டில், பெண்ணென்றால் பேயு மிரங்கிடுமென்று பெரியோர்கள் பேசுவாரே. (௫௩)

கிருஷ்ணபகவான் ஐவரைக்காத்த கதை.

வள்ளல்கன்னன் கைநாகக் கணைப்புலன்மா லறிந்தவன்தன் மாதாவைப்போய்ப், பிள்ளையின்மேல் நாகமொரு தரம்விடுத்து நிறுத்தெனவும் பேசச்சொல்லித், தெள்ளியபஞ் சவருயிரைக் காத்தார்தென் நேமநகர்ச் செயங்கொண்டாரே, வெள்ளம்வரு முன்னணையைக் கோலிவைப்போர் காரியங்கள் மிகநன்றாமே. (௫௪)

இரணியன் கதை.

ஆச்சரிய விரணியனட் டாக்காத்தை யிகழ்ந்தாற்போல் லாப் பெண்ணுமல், கூச்சமறத் தள்ளியிர ணியநமா வென்றதினுற் குலைந் தான்தேகம், பேச்சிழலை யுண்டமுகில் பணிசெயங்கொண் டாரே நீள் பெருங்காற்றுக்குள், நீச்சறியா மைந்தரைவெள் ளங்கொண்டு போமென்றல் நிசங்கண்டீரே. (௫௫)

உருக்குமாங்கதன் கதை.

நன்னிலத்தி லுருக்குமாங் கதராச னொருவிரதம் நடத்தினு னென், றன்னகரு மவ்விரதந் தொடங்கியதால் யமனவரை யணுகக்கூடா தென்னயம தண்டனைசே ராதிருந்தார் செயங்கொண்டாரிலங்குநாட்டில், மன்னவனெப் படியோமன் னுயிருமந்தப் படியெனவும் வழுத்துவாரே. (ருசா)

நளன் கதை

அடவிசென்று நகரிழந்து வறுமைதங்கி யுடன்மெலிந்தே யம்மானூர்வந் திடவுமம்மா னேவலினு லமைச்சரழைத் திடவருவ திலைபோவென்ற, திடநளனை மாமனெதிர் கொண்டழைக்கச் சம்மதித்தான் செயங்கொண்டாரே, கடுகுசிறுத் தாலுமென்ன காரம்போகாதெனவுங் கழறுவாரே. (ருஎ)

சூரபத்மன் கதை.

பூதலமும் பொன்னுலகு மேவல்கொண்ட சூரனரன் புதல்வற்கஞ்சிச், சூதமர மாயொளித்துக் கடைசியிற்செவ் வேள்கரத்திற் றுசமானனே, தாதவிழ்பூங் கொன்றையணி செயங்கொண்டாரேசெடியைத் தாண்டித்தாவிக், காதமோடினும்முயற்குக் கைதூக்கென் றுலகிலுள்ளோர் கழறுவாரே. (ருஅ)

பொய்த்தவ வொழுக்கத்தோர் கதை.

பூமிதனிற் சிலர்நீறிட் டிருகரமுங் குவித்திருகண் பொத்திக்கொண்டே, காமியர்கள் மேற்பொருள்மேல் மனங்கிடக்க வாயிலரகரவென்பாரே, நேமியணி வோன்தேட வரியபதச் செயங்கொண்டார் நிமலர்நாட்டில், மாமிதலை மேற்கையும் வேலிபுறத் தினிற்கண்ணும். வைத்தவாறே. (ருகூ)

திருவிளையாடற் புராணக் கதை.

பெண்ணிறக்கத் தொங்குமம்பால் வில்வேட னடுத்துவாப் பெண்ணுக்காளன், நண்ணிநீதான் கொன்றனைவா வெனவிழுக்க மதுரையரன் நடுவுரைத்தார், அண்ணலரனேசெயங்கொண் டாரேகா தாரக்கேட் டதும்பொய்யாகுங், கண்ணாரக் கண்டதும்பொய் தீர்க்கவிசாரிப்பதுமெய் காணுந்தானே. (சா0)

சூதமரம்—மாமரம்.

துரியோதன னரசிழந்த கதை.

கூறுமரவக்கொடியோன் பாண்டவருக் கைந்நிலமுங் கொடுக்கேனென்று, வீறுசொன்னான் சுடக்கொடுத்த பின்னுயிரோ டுலகமுற்றும் விட்டானன்றோ, நீறணிமெய்ச் செயங்கொண்டா ரேயாற்றோ டேழுடர் நேர்போனாலும், போறதல்லா லோடக்கா ரனுக்கரைக்கா சுங்கொடுக்கப் பொருந்திடாரே. (௬௧)

சீவகன் கதை.

பெலமுற்ற சிங்கமொரு கன்றீன யானையதன் பின்னேசெல்ல விலைபெற்ற கரியையரிக் கன்றுதள்ளிப் பாய்ந்தகதை மெய்யாமன்றோ, நிலைபெற்ற வெழுநகரத் தார்வணிகர் செயங்கொண்டார் நிலவுநாட்டில் குலவித்தை கல்லாமற் பாதிவரு மென்றுலகோர் கூறுவாரே. (௬௨)

கொக்கு மீன்களை மடித்துத் தானுமடிந்த கதை.

நன்றார்மீன் களைச்சர்வ சீவதயா பரபகந்தான் நயமாய்ப்பேசி, முன்றானே சிதைத்தபழி தனக்கலவன் பகக்கழுத்தை முறித்திற்றன்றோ, நின்றார்ந்த தனவணிகர் தொழவருளுஞ் செயங்கொண்டார் சேமநாட்டில், கொன்றாரைக் கொல்லுமல்லால் கொலைவிடா தென்றுலகோர் கூறுவாரே. (௬௩)

வாமனாவதாரக் கதை.

உலகமெல்லா முடல்சிறுத்துஞ் சிறியவா மனனளந்தா னொருபாதத்தா, லலகையின்காத் திடமொடுங்கக் கிருஷ்ணபிரான் பாலருந்தி யவளைமாய்த்தான், சிலைநுதலாள் சௌந்தரிநா யகியையிடப் பாகம்வைத்த செயங்கொண்டாரே, மலைபெரிதா னாலுமென்ன சிற்றுளியால் தகருமென்றல் வாக்யந்தானே. (௬௪)

புட்கரனோடு நளன் சூதாடிய கதை.

காவலன்புட் கரன்நளனைச் சூதாட வரவழைத்த கபடங்கண்டே மேவியசூ தாடாமல் தள்ளிவிட்டால் சனிநளனை வினைசெய்வானோ, வாவிதிகழ் தென்சேமச் செயங்கொண்டா ரேமிகுந்த வளஞ்சேர் நாட்டில், நாவிதன்செய் தியையறிந்து குடிமியைப்பத் திரப்படுத்தல் நலமென்பாரே. (௬௫)

குமண ராசன் கதை.

சிம்மாச னன்குமணன் சிரம்போலே விழிமூக்குச் செவிவாய் செய்து, சம்மாரம் பண்ணிரத்த முஞ்சொரியக் கொடுத்ததெவன் தட்டானன்றே, பெம்மானே தென்நேமச் செயங்கொண்டா ரே மலையைப் பிரட்டுங்கையான், கம்மாளன் காப்பொன்னில் மாப் பொன்னுக் காரனெனக் கழறுவாரே. (௬௬)

ஆமை வாயாற் கேட்ட கதை.

கொடியையிரண் டோதிமங்கௌ விப்பறக்க நடுக்கூர்மங் குல விச்செல்கால், நொடியிலொரு செய்திசொல வாய்திறந்தா மையும் விழுந்து நொறுங்கிற்றன்றே, வடிவுளதந் திரக்கதையு முண்டுசெ யங் கொண்டார்தம் வளஞ்சேர்நாட்டில், நெடுங்கிணறும் வாயா லே தூறுமென்று சொல்லுமொழி நிசங்கண்டீரே. (௬௭)

திரிச்சங்குராசன் கதை.

நம்புகுரு வதிட்டர்பகை மிகுந்திருக்கும் போதுதிரிச் சங்கு ராசன், வம்புரைத்த கோசிகராற் சொர்க்கமதி லேறிநின்றான் மகிமையுண்டோ, சம்புமகா தேவசெயங் கொண்டாரே யெதிராளி தனுவாலெய்த, அம்புவிழக் கையிலிழை கட்டிவிட்டால் மெய்யினிற் புண் ணுறிடாதே. (௬அ)

சுக்கிரன் கண்ணிழந்த கதை.

கூச்சமற மாவலிபூ மியைக்கொடுக்க மால்வாங்கக் குறுக் கேசுக்ரன், பேச்சறியா மற்பேசிக் கண்ணிழப்ப தேனேதிங்கிப் பிழைக்கொணுதோ, ஆச்சரியம் செயங்கொண்டா ரேயிலங்கா புரிராம ராண்டாலென்ன, ராட்சதர்கள் தாளுண்டா லென்னவெ ன்று பேசுமிந்த நாடுதானே. (௬௯)

மானமுள்ள மகாபுருடன் கதை.

நீரெடுத்தோர் கலசமதிற் கவசமுஞ்செய் தொருவன்வந்தான் நெடுநாள்கும்பம், பாரில்விழுந் துடையவின்னு மொருகலச மென்மானம் பார்க்கும்போது, சீரலவென் றழுதானென் றொரு கதைசொல் வார்நேமச் செயங்கொண்டாரே, யாரெனினு மானமி ழந் துயிர்காப்ப தென்னவென்பா ரவனிமீதே. (எ0)

கருடன் கதை.

விருப்பமறை யோன்தனக்குப் பிறந்தநிரு தனேயுவணன் விழுங்கும்வாயில், நெருப்பெழச்சுட் டதனுற்செங் கருடனிரு தனே விடுத்தா னெனவோர்பாட்டில், திருப்பதிவேங் கடசதகந் தனிலு ரைத்தார் முன்பெரியோர் செயங்கொண்டாரே, நெருப்பிருப்ப தறியாமல் தொட்டாலுஞ் சுடுமெனவே நிகழ்த்துவாரே. (எக)

பட்டணத்துப் பிள்ளை கதை.

கையினிற்பட் டணத்தார்க்குத் தமக்கைநஞ்சு கலந்துபல கா ரஞ்செய்தே, ஐயமறக்கொல்லவென்று கொடுக்கவவள் மனேநெருப் பா லழிந்ததன்றே, துய்யபைஞ கச்சிலேயிர் செயங்கொண்டாரே பிறர்க்குத் துன்பங்காணச், செய்ததீ வினேதானுஞ் செய்தவர்க்கே சேருமெனச் செப்புவாரே. (எஉ)

விக்ரமாதித்தன் கதை.

சிந்தைமகிழ் விக்கிரமா தித்தனுக்கா யிரவருடந் தேவியிந் தாள், புந்திவலு மந்திரிசொல் லாலிரண்டா யிரவருடம் புவியை யாண்டான், சுந்தரர்க்குத் தூதுசென்ற செயங்கொண்டா ரேதரு மந் துலங்குநாட்டில், மந்திரங்கால் மதிமுக்கா லென்றுலகந் தனி லுள்ளோர் வழுத்துவாரே. (எங)

காளிதாசன் கதை.

நிசகாளி தாசனரண் மனேவாயிற் புகவேண்டி நிருபன்கீர்த்தி, சுகநாசி பல்போலென் றுரைத்ததனுற் செல்லவிட்டார் தொன்றப் போவென், றிசைவாங்கிர் வாணம்போ சன்றன்மேற் பகர்ந்தனன் காண் செயங்கொண்டாரே, பசுமாட்டுத் தோலதனேப் புலிபோர்த் துக் கொண்டிருந்த பண்புதானே. (எச)

இராவணன் போர்க்குத்துணிந்த கதை.

யாகத்தாற் செயமுமில்லே யிறப்பதினி நிசம்புரிவ தியாதுங் காணேன், லோகத்தா ரிராமனென வுரைக்குமட்டு மிராவண னென் றுரைப்பார்போர்க்குப், போகத்தான் துணிந்தனென்று னரக்கனதாற் செயங்கொண்டார் பொருந்துநாட்டில் சாகத்தான் துணிந்தவர்க்குச் சமுத்ரமுழங் காலளவு தானென்பாரே. (எரு)

நக்கீரர் கதை.

அத்தனார் கரத்தெழுதி யடிமைக்கிந் திட்டசெய்பு ளதனை நோக்கிச், சித்தமது தளராம லியற்கைமணங் கூந்தலுக்குச் சேரு மென்ப தொத்ததிலே குற்றமென்றார் நற்கீரர் செயங்கொண்டா ருகந்தநாட்டில், வித்துவான் மதயானை நிகர்வனெனப் பெரியோர் கள் விளம்புவாரே. (எசு)

துரோணர் பெண்சாதி கதை.

உச்சிமாய்த் துரோணர்சொன்ன மொழிப்படியே யவர்மனைவி யுடையில்லாமல், பிச்சையிடக் கொள்சிவனுக் கக்கணமே நாதம் வெளி பிறந்ததன்றே, தெட்சணமா முனிபரவுந் தென்னேம நகரில் வளர் செயங்கொண்டாரே, யிச்சையுள்ள காமுகர்க்குக் கண்கண்ட விடத்தினிலென் றியம்புவாரே. (எஎ)

வாதாபி கதை.

மெத்தனுள் வாதாபி வேதியர்க ளுயிரையுண்டு மேவிக்கும்ப, சித்தனைச்சாப் பிடநினைத்தான் சித்தனவ னுயிரைமுற்றுஞ் சிதைத் துப்போட்டான், மத்தகசந் தனையுரித்த செயங்கொண்டா ரேயார் க்கும் மனதுக்கேற்க, நித்தியம மாவாசிப் பருக்கையுணக் கிட்டிடு மோ நிலத்துமீதே. (எஅ)

நாரை மூக்குக்குவமை சொல்லிய கதை.

பார்புகழும் பாண்டியர்க்குச் சங்கத்தார் பேரறிவாற் பகர வொண்ணு, நாரைமூக் குக்குவமை பனங்கிழங்கென் றொருபுலவன் நவின்றானன்றே, சீருலவுங் கங்கைதிங்க ளரவமொடு கொன்றை யணி செயங்கொண்டாரே, காருலவும் புவியிலுள்ளோ ராகாயந் தனையும்வரை கட்டுவாரே. (எகூ)

விறன்மிண்ட நாயனார் கதை.

ஆரூரெல் லையில்மிதியே னென்றவிறன் மிண்டர்தனை யரன் சோதித்தப், பாரிலொரு கால்மிதிக்கச் செய்ததுகண் டக்காலைப் பதறியீர்த்த, சீருவந்து சிவன்காட்சி கொடுத்தாரன் றேநேமச் செயங்கொண்டாரே, பேருலகில் மனங்கலங்கிப் பிடிவாதம் பிடித் தவர்க்குப் பேருண்டாமே. (அ0)

சேந்நாப் புலவர் கதை.

உற்றசெந்நாப் புலவர்மிக்க கணிகணன்மேற் கோபமதா யுல குண்டோனை, யிற்றையாம் புறப்படுவோ மினியுன்பாய் சுருட்டியெ ழுந் திருவென்றேதச், சித்தசன்தன் தாதைவர தப்பெருமா ளெ ழுந்தனரே செயங்கொண்டாரே, பத்தருளத் தினிலீசன் குடியி ருப்பா னெனச்சொல்லும் பண்பிதாமே. (அக)

குசலவர் கதை.

மிகப்பெரிய மாலசுவங் தனைப்பிடித்துக் கட்டிவந்த வினைப் போர்தன்னைப், பகற்பொழுதிற் பொடியாக்கித் தாதைதனை வென் றகுசன் பண்புபாரீர், செகத்தரசர் புகழவருந் தென்நேம நாடதி பர் செயங்கொண்டாரே, தகப்பனொரு பாக்கெனவும் பிள்ளையொரு தோப்பெனவும் சாற்றுவாரே. (அஉ)

இரேணுகாதேவி கதை.

தண்பரசு ராமனது தாயுடலிற் பறைச்சிதலை தரித்தமின்னாள், நண்பரிடங் கொண்டுவர விவள்முழுதும் பறைச்சியென நகைத்து நாதன் திண்புயனே யிவளையப்பால் துரத்தெனச்சேய்க் குரைத்த னரே செயங்கொண்டாரே, பண்புலவென் சாணுடம்பிற் சிரசுபிர தானமெனப் பகருவாரே. (அங)

கண்ணன் கதை.

பார்த்தனுக்கோ ருரியகண்ணன் பலபத்ர ராமனைத்தான் பாரைச் சுற்றென், றேய்த்தனுப்பித் தன்னைச்சார்ந் தோரைரட்சித் தண்ணனைச்சார்ந் திருந்துவாழ்ந்த, கோத்திரமாம் நூற்றுவரைக் கொல்லவுஞ்செய் தான்செயங்கொண் டாரேகேண்மோ மூத்த துவே மோழையென்று மிளையதுவே காளையென்று மொழிகு வாரே. (அச)

நிரம்பவழகியர் கதை.

பொன்னூர்செல் வமுந்தமிழும் பொருந்தரசன் செருக்கதனாற் புலவருக்குள், மன்னூன நிரம்பவழ கியரையண்டங் காக்கையென வழுத்தக்கேட்டே, யன்னூர்நீ யேயண்டங் காக்கையென்றூர் செயங் கொண்டா ரணிகொள்நாட்டில், தன்னாலே தான்மெலிந்தா லண் ணாவி யென்னசெய்வான் தரணிமீதே. (அரு)

நந்திராசன் கதை.

சூத்திரப்பா வையைநிகர்மெய் யிதனைநம்பொண் ணுதெனவுந் துணைவன்கல்விக், காத்மதத்தஞ் செய்துலக முள்ளமட்டும் புகழ்ப டைத்தா னன்றேநந்தி பூர்த்தியசுந் தரர்க்கடிமை முறிகாட்டுஞ் செயங்கொண்டார் புனிதநாட்டில் கீர்த்தியப கீர்த்தியிவை வந்தாற் போ காதெனவே கிளத்துவாரே. (அசு)

சுவாகாள் கதை.

ஆறுரிஷி பத்தினிமார் பழுதுபடா திருக்கையிலே யன்னோர் ரூபங், கூறுசுவா காளெடுத்தக் கினிதேவைத் தழுவரிஷிக் கூட்டங் கூடிச், சீறியறு வரைத்துரத்தத் தவசுக்கே கினரன்றோ செயங் கொண்டாரே, வாரவிதி வந்ததென்றால் வளைந்தாடும் பானையென்று வழுத்துவாரே. (அஎ)

அருந்ததி கதை.

நித்தியசங் யாசியென்றும் நித்யோய வாசியென்றும் ரிஷிகள் கூற வத்தைமெய்யென் றருந்ததியாள் கங்கைதனக் குரைத்துவழி யன்பாய்க்கேட்கச், சித்தமகி ழருந்ததிசொற் றனக்குவழி கங்கை விட்டாள் செயங்கொண்டாரே, பத்தினியுத் தமிவாக்குப் பலிக்கு மென விகபரமும் பகருவாரே. (அஅ)

மிருகண்டர் கதை.

மதிமெதுவா லொருநூறு வியன்மதியாற் பதினாறு வயதுபுத்ர, னெதுதருவோ மெனச்சிவனே நல்லபிள்ளை வயதீரெட் டிருந்தாற் போது,மதுதருவீ ரென்றுமிரு கண்டுமுனி யன்றுரைத்தார் செயங் கொண்டாரே, யிதுசாணி யொருகூடை மிகசவ்வா தோர்பணத்தி னிடையென்பாரே. (அகூ)

அனுமான் கதை.

சலியாமற் கடல்தாண்டி மருத்துமலை கொணரனுமான் தடந் தோடன்னை, நலியாம லிந்த்ரசித்தன் பாசத்தாற் கட்டிவிட்டான் நாளெல்லாமே, கலியாண முரசொலிக்குந் தென்நேமச் செயங் கொண்டார் கனத்தநாட்டில், வலியார்க்கு வலியாரு மிருப்ப ரென்றே யுலகிலுள்ளோர் வசனிப்பாரே. (கூ0)

பாண்டியராஜன் கதை

மதுரைமன்ன னிடத்திருந்த பரிகள்பற்று தெனவிலைக்கு மாவனேக, மிதமுடன்சே கரித்தநிமித் தியத்தான்முன் னசுவ மெல்லா மிழந்தானன்றோ, நிதிபடைத்த வணிகர்தொழுஞ் செயங் கொண்டா ரேயேரி நிரைக்கவேண்டிப், புதியவெள்ளம் வரப்போய் முன் னிருந்தவெள்ளத் தையுமிழுத்துப் போனவாறே. (௩௧)

கம்பருக்குக் குலோத்துங்கன் அடைப்பைக்காரனுன கதை.

இன்றமுத லென்னாட்டி லிருக்கொணு தென்றரச னியம்பக் கம்பர் அன்றமுத லகன்றனர்பின் னவர்க்கடைப்பைக் காரனைப் போ லவன்சார்ந்தானே கன்றுவப்பப் பாலூட்டுங் கனவணிகர் தொழச்செயங்கொண் டாரேகற்றூர் சென்றசென்ற விடமெல்லாஞ் சிறப்பெய்வ ரென்றமொழி செம்மையாமே. (௩௨)

சூரியனைச் சக்கரத்தால் மறைத்த கதை.

வாணிமா துலன்தோழ னிறவாமற் காக்கவென்ன வகைசெய் வோமென், றுணியிர வியைத்திகிரி யான்மறைத்துப், பார்த்தனைக் காத் தருளினரே, நாணரவாற் பொன்மலையை வளைத்துசெயங் கொண்டார்வாழ் நலஞ்சேர்நாட்டில், வேணுமென்று நூற்றுல்மெல் லியநூலாய் நூற்றிடுவார் மெய்யதாமே. (௩௩)

மயில்ராவணன் கதை.

அச்சமில்லா ராக்கதரா வணனைமயில் ராவணன்சேர்ந் தழிந் துபோனுன், பட்சமுள்ள ராமபிரா னடிசேர்ந்து விபீஷணனே பண்பாய்வாழ்ந்தான், கச்சணியுந் தனத்திசௌந் தரிபாகர் செயங் கொண்டார் கனத்தநாட்டில், துர்ச்சனர்துர்ச் சனரென்றும் நல்லவர்நல் லவரென்றுந் துலங்குவாரே. (௩௪)

பரமசிவன் வரமளித்த கதை.

தோத்திரஞ்செய் தேபத்மா சூரன்முனங் கேட்டவரஞ் சோ மர்தந்த, மாத்திரமே யவன்விரட்டப் பயந்தோடி யொளியவிதி வந்ததென்னே, கோத்திரமோர் கொடியெனவே நில்வுகுல வணிகர் தொழும் செயங்கொண்டாரே, ஆத்திரக்கா ரருக்கானுல் புத்திமட் டென் ேறுருவசனம் அதுமெய்யாமே. (௩௫)

நக்கீரர் கதை.

அரசிலையிற் பாதிபட்சி பாதிமச்ச மானவிந்தை யனைத்தும் பார்த்து, விரவுளநிட் டையைமறந்த நக்கிரர் தனைப்பூதம் விழுங் கத்தூக்கித், திரண்மலையி லடைக்கவள்ளி கணவனன்றோ விலக்கி விட்டான் செயங்கொண்டாரே, யுரைசெய்தவ மறந்தார்கை தவ மாளு மென்றௌவை யுரைத்தவாறே. (௬௬)

வேடன் கதை.

அடவியில்வே தியற்கொருவே டன்தினமாப் பகுந்தபல னூற்காசிக்குத், திடமுளமன் னவன்சேயாய்ப் புவிபுரக்கப் பொற்க லத்திற் செனித்தானன்றோ, வடவரையைச் சிலையாக வளைத்த செயங் கொண்டாரே வையந்தன்னி, லிடுவதுபிச் சைபின்பு பெறு வதுவோ மோட்சமென வியம்புவாரே. (௬௭)

துருவாசமுனி கதை.

வாச்சுதெனத் துருவாச ருருக்குமாங் கதனைமெத்த வருத்த வாழி, பாச்சலினுன் முனியைவெல்ல வரவுருக்கு மாங்கதன்தான் பரித்தானன்றோ, கூச்சமறச் சிலந்திகுரு வியைக்கதிசேர்த் திட்ட செயங் கொண்டார்நாட்டில், சாட்சிக்கா ரனைப்பணியார் சண்டைக் கா ரனைப்பணியத் தகுமென்பாரே. (௬௮)

வரரிஷி கதை.

சிவயோகர் வெகுளியினல் வரரிஷியு மகிடமெனச் செனித்தா ன்பாரில், பவமடியாற் கற்றவுமை லிங்கபரா ணியைவந்தத்த பழி யின்தோஷம், நவதீர்த்த மாடியன்றோ தொலைந்ததென்பார் செயங் கொண்டார் நலஞ்சேர்நாட்டில், தவமுடையோர் மனமழுங்கச் செயப்படா தென்றுலகோர் சாற்றுவாரே, (௬௯)

பகீரதன் கங்கையைக் கோணர்ந்த கதை.

நீக்கரிய பழிநீங்கக் கங்கைதனைப் பகிரதனும் நிமலன்தன் பால் தூக்கமுணா வின்றிநனி தவமியற்றிக் கொணர்ந்துபவந் தொ லைத்தானன்றோ ஆக்கமிகு தனவணிகர் தொழவருளுஞ் செயங் கொண்டா ரரியநாட்டில் ஊக்கமது கைவிடேல் எனவுரைத்த கிழவிமொழி யுண்மைதானே. (௱)

ஜெயங்கொண்டார் சதகம் முற்றிற்று.

இந்நூலாசிரியரான கடாட்சகவி,

முத்தப்ப செட்டியார் அவர்கள்

தம்மரபினர்

முன்னேறும் பொருட்டுப் பாடியருளிய

பஞ்சாட்சர வர்க்கபூஷணம்.

கலித்துறை.

நன்றே பெருக நவிலுங்கு பேரர் நகர்வணிக
ரென்றே யுலகம் புகழ வவர்க்கீண் டிருநிதியம்
நின்றே நிலவ வறமும் கனமும் நெடிதுபெறத்
தோன்றேசோ ஸ்ரீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே.

மன்னும் பெருமை பெருகிக் குபேரர் நகர்வணிக
ரென்னும் மகிமை யுறவும் வறியவர்க் கீந்திடவும்
பொன்னும் பொருளும் புவியுமுப் போகம் பொருந்திடவும்
[illegible]ஞ்சோ ஸ்ரீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே.

சி[illegible] திருமால் பணியும் சிறப்புறத்தான்
நவ[illegible] மாக்கியும் மேலோர் நவிலுநல்ல
தவம[illegible]தனத் தரணியி லோங்கவும் தாங்குமகத்
தி[illegible] ஸ்ரீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே.

வந்தார்க் குதவும் வணிகர் குபேரனும் வள்ளலுக்கும்
பிந்தார் தனத்தி லிவரே யுலகில் பெரியரெனச்
சிந்தார் புரமிளை யாத்தங் குடியார் சிறப்புறவும்
சொந்தார்சோ ஸ்ரீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே.

யவனங் கலிங்கந் தமிழ்சிங்க ளம்பல யாண்டுமுள்ள
புவன மெலாமிவர் வர்த்தக மோங்கவும் புண்ணியஞ்சேர்
தவமும் தருமமும் தங்க வணிகர் தரம்பெறவும்
துவசசோ ஸ்ரீசர் செயங்கொண்டார் பாதம் துதிக்குதுமே.

ஒவ்வொரு பாட்டின் தலைப்பிலுள்ள முதலெழுத்தைச் சேர்த்துப் படித்தால் பஞ்சாட்சர மந்திரமாகும்.